வடக்கின் முதல் நாளிதழ் – Estd 1959
Reg. No. : P . 1632
விலை ரூ. 30/=

# ஈழநாடு
Eelanadu ඊළනාඩු

Email : eelanaduweekly@gmail.com மலர் : 05 04.03.2024 திங்கட்கிழமை இதழ் : 64 பக்கங்கள் : 12










# சாந்தனின் வித்துடலுக்கு மக்கள் திரண்டு அஞ்சலி!

- இல்லம் வந்தது சாந்தனின் வித்துடல்
- இறுதிக் கிரியைகள் இன்று நடக்கும்
- ஊர்தி பயணத்துக்கு பொலிஸ் தடங்கல்
- கண்ணீர் சிந்திக் கதறி அழுத தாய்மார்

யாழ்ப்பாணம், மார்ச் 04

**பல்லாயிரக்கணக்கில் மக்கள் திரண்டு கண்ணீர் சிந்தி - கதறி அழுது - பூக்கள் தூவி அஞ்சலி செலுத்த சாந்தனின் வித்துடல் நேற்று மாலை அவரின் சொந்த இடமான உடுப்பிட்டி - இலக்கணாவத்தைக்கு எடுத்துவரப்பட்டது.**

இன்றைய தினம் முற்பகல் 10 மணிக்கு இறுதிக் கிரியைகள் இடம்பெறவுள்ளன. இதைத் தொடர்ந்து இறுதி வணக்க உரைகள் இடம்பெற்று எள்ளங்குளம் இந்து மயானத்தில் அவரின் வித்துடல் விதைக்கப்படும் என்று தெரிவிக்கப்பட்டது.

சாந்தன் என்று அறியப்பட்ட தில்லையம்பலம் சுதேந்திரராஜா கடந்த 28ஆம் திகதி சென்னை ராஜீவ் காந்தி

11

## கொழும்பு - புதுடில்லி உறவை வலுப்படுத்த செயல்படுவேன்!


### புதுடில்லியில் அமைச்சர் ஜீவன்

புதுடில்லி, மார்ச் 04

இலங்கையில் கடும் பொருளாதார நெருக்கடி ஏற்பட்டிருந்த காலப்பகுதியில் இலங்கை மக்களின் நலன் கருதி இந்தியா வழங்கிய ஒத்துழைப்புகளையும், மலையக மக்களுக்காக இந்தியா வழங்கி வரும் ஆதரவையும் ஒருபோதும் மறக்கமாட்டோம். கொழும்பு - புதுடில்லி உறவை மேலும் வலுப்படுத்துவதற்கு முன்னின்று செயல்படுவேன் - இவ்வாறு நீர்வழங்கல் மற்றும் தோட்ட உட் கட்டமைப்பு வசதிகள் அபிவிருத்தி அமைச்சர் ஜீவன் தொண்டமான் தெரிவித்தார்.

11

## இந்திய அத்துமீறலை எதிர்த்து மீனவர்கள் கடலில் போராட்டம்!



யாழ்ப்பாணம், மார்ச் 04

இலங்கை - இந்திய கடல் எல்லைக்கு படகில் சென்ற மீனவர்கள் இந்திய மீனவர்களின் அத்துமீறலுக்கு கறுப்பு கொடி காட்டி எதிர்ப்புத் தெரிவித்தனர்.

பருத்தித்துறை, நெடுந்தீவு, ஊர்காவற்றுறை, மண்டைதீவு, மாதகல், மயிலிட்டி, வெற்றிலைக்கேணி உள்ளிட்ட பல்வேறு பகுதிகளை சேர்ந்த மீனவர்கள் நேற்றைய தினம் படகுகளில் சென்று தமது எதிர்ப்பை வெளிப்படுத்தினர்.

சுமார் 400இற்கும் மேற்பட்ட படகுகளில் சென்ற மீனவர்கள் தமது எதிர்ப்பை நடுக்கடலில் பல்வேறு இடங்களில் தெரிவித்தனர். இவர்கள்

11

## இலங்கையின் பொறுப்புக்கூறல் ஜெனிவாவில் இன்று ஆராய்வு!

ஜெனிவா, மார்ச் 04

ஐ. நா. மனித உரிமைகள் பேரவை கூட்டத் தொடரில் இன்று திங்கட்கிழமை இலங்கையின் பொறுப்புக்கூறல் விவகாரம் தொடர்பில் ஆராயப்படவுள்ளது.

ஜெனிவாவில் நடக்கும் 55ஆவது கூட்டத் தொடர் கடந்த மாதம் பெப்ரவரி 26ஆம் திகதி ஆரம்பமானது. இந்த நிலையில், வெள்ளிக்கிழமை மனித உரிமைகள் ஆணையாளர் வோல்கர் ரூர்க் தனது வாய்மொழி அறிக்கையில் பாதிக்கப்பட்ட தரப்பினருக்கு நீதி கிடைக்கவில்லை. அத்துடன்,

11

## தமிழர்களுக்கு நீதி கிடைக்க தொடர்ந்து இயங்கத் தயார்!

### அமெரிக்க காங்கிரஸ் உறுப்பினர்



வாஷிங்டன், மார்ச் 04

இலங்கையில் இனப்படுகொலை இடம்பெற்றது என்பதை ஏற்றுக் கொண்ட முதலாவது அமெரிக்க காங்கிரஸ் உறுப்பினர் என்ற ரீதியில் தமிழ் சமூகத்துக் கான நீதி, சமாதானம் மற்றும் சுபீட்சமான எதிர்காலம் ஆகியவற்றை முன்னிறுத்தி தொடர்ந்து இயங்கத் தயாராக இருப்பதாக விலி நிக்கேல் தெரிவித்துள்ளார்.

11

## செங்கடலின் பாதுகாப்புக்கு மீண்டும் கப்பலை அனுப்புகின்றது இலங்கை!

கொழும்பு, மார்ச் 04

சர்வதேச கடற்பரப்பில் கடல்சார் பாதுகாப்பை உறுதி செய்வதற்கான நடவடிக்கைக்காக இலங்கை செங்கடலுக்கு தனது இரண்டாவது கப்பலை அனுப்பவுள்ளது என்று கடற்படை பேச்சாளர் கப்டன் தயான் விக்கிரமசூரிய தெரிவித்துள்ளார்.

முதலாவது கப்பல் தனது நடவடிக்கையை பூர்த்திசெய்த பின்னர் இரண்டு நாட்களுக்கு முன்னர் நாடு திரும்பியது. எஸ். எம். எஸ். கஜபா என்ற கப்பலை 100 கடற்படையினருடன் சென்றதாகவும் அவர் கூறினார்.

அத்துடன், சரக்கு மற்றும் மீன்பிடி கப்பல்களின் பாதுகாப்பை உறுதி செய்வதற்காகவே இலங்கை இந்த கப்பலை அனுப்பியது. இணைந்த கடல்சார் படையணியுடன் சேர்ந்து செயல் பட்டு இந்து சமுத்திரத்தில் போதைப்பொருள் பயன்பாட்டை கட்டுப்படுத்துவதும் இதன் நோக்கமாக இருந்தது.

அரேபியன் கடல், கடற்

11

## சிவாஜிலிங்கம் மருத்துவமனையில்!

சென்னை, மார்ச் 04

முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் எம். கே. சிவாஜிலிங்கம் இந்திய மருத்துவமனையில் அவசர சிகிச்சைப் பிரிவில் சேர்க்கப்பட்டுள்ளார்.

நேற்றுமுன்தினம் அவருக்கு ஏற்பட்ட திடீர் உடல்நலக் குறைவால் சென்னை - வட பழனி விஜயா மருத்துவமனையில் சேர்க்கப்பட்டுள்ளார்.

11

## மீனவர் பிரச்னைக்கு பேச்சு மூலமாக தீர்வு

### சாகல - சந்தோஷ் ஜா சந்திப்பில் முடிவு

கொழும்பு, மார்ச் 04

இலங்கை - இந்திய மீனவர்களின் பிரச்னைக்கு நிரந்தரத் தீர்வை ஏற்படுத்தும் வகையில் பேச்சுகளை முன்னெடுக்க தீர்மானிக்கப்பட்டுள்ளது.

தேசிய பாதுகாப்பு ஆலோசகர் சாகல ரத்நாயக்கவும் இலங்கைக்கான இந்தியத் தூதுவர் சந்தோஷ் ஜாவும் சந்தித்து கலந்துரையாடியபோதே இந்தத் தீர்மானம் எடுக்கப்பட்டது.

இலங்கையில் தடை செய்யப்பட்ட மீன்பிடி உபரகணங்களை பயன்படுத்தியும் இலங்கையின் கடல் எல் லைக்குள் அத்துமீறி நுழைந்தும் இந்திய மீனவர்கள் மீன்பிடித்து வருகின்றனர்.

11

**உண்மைகள் புனிதமானவை; கருத்துக்கள் சுதந்திரமானவை**

# இப்படியும் நடக்கிறது

புலம்பெயர் தமிழர்களை இலங்கையில் முதலீடுகளை மேற்கொள்ள முன்வருமாறு அரச தரப்பால் தொடர்ந்து அழைப்பு விடுக்கப்பட்டு வருவது இரகசியமானதல்ல.

நூற்றுக்கணக்கான புலம்பெயர் தமிழர்களையும் சில அமைப்புகளையும் பயங்கரவாதிகள் பட்டியலில் வைத்து தடை செய்து வைத்திருந்த முன்னாள் ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ ஜனாதிபதியாக இருந்தபோதும் அவர் கூட அவ்வாறான ஓர் அழைப்பை விடுத்திருந்தார்.

இந்த நிலையில்தான், புலம்பெயர் தமிழர்களில் பெரும் கோடீஸ்வரர்களில் ஒருவரான ‘லைக்கா’ நிறுவனத்தின் சுபாஸ்கரன் இலங்கையில் பல்வேறு முதலீடுகளை செய்ய முன்வந்ததுடன் பல முதலீடுகளை ஏற்கனவே செய்திருந்தார்.

இந்தியாவில் மிகப்பெரிய அளவில் சினிமாத்துறையில் முதலீடுகளைச் செய்துவரும் அவர் தற்போது இலங்கையில் முதலீடுகளை செய்ய முன்வந்திருப்பதுடன், சிங்கள திரைப் படங்களையும் பெரிய முதலீடுகளில் தயாரிக்க ஆரம்பித்திருக்கின்றார்.

இந்நிலையில், இலங்கையில் முக்கிய அரச நிறுவனங்கள் சிலவற்றை அவர் வாங்குவதற்கு செய்திருந்த விண்ணப்பங்களை அமைச்சரவை எதுவித காரணங்களும் கூறாமல் நிராகரித்திருப்பதற்கு எதிராக இப்போது நீதிமன்றத்தின் உதவியை நாடியிருக்கிறார்.

சிறீ லங்கா ரெலிக்கொம் மற்றும் லங்கா ஹொஸ்பிட்டல்ஸ் கோர்ப்பரேஷன் ஆகியவற்றில் இலங்கை அரசாங்கத்தின் பங்குகளை விற்பனை செய்வது தொடர்பாக எடுக்கப்பட்ட நடவடிக்கைகளுக்கு எதிராக இவர் தாக்கல் செய்த மனுவை விசாரணை செய்த மேன்முறையீட்டு நீதிமன்றம் அந்த நிறுவனங்களின் பங்குகளை விற்பதற்கு எதிராக இடைக்கால தடை உத்தரவை பிறப்பித்திருக்கின்றது.

சிறீலங்கா ரெலிக்கொம் மற்றும் லங்கா ஹொஸ்பிட்டல்ஸ் கோர்ப்பரேஷன் ஆகியவற்றில் இலங்கை அரசாங்கத்தின் பங்குகளை விற்பதற்கு எதிராக தாக்கல் செய்யப்பட்ட எழுத்தாணை மனுக்களை பரிசீலனைக்கு எடுத்துக்கொண்டபோதே மேன்முறையீட்டு நீதிமன்ற நீதியரசர் டி. என். சமரக்கோன் இந்த உத்தரவை பிறப்பித்தார்.

சிறீலங்கா ரெலிக்கொம் பங்குகளை விற்பதற்கு எதிராக லைக்கா மொபைல் மற்றும் எஸ். எம். ஆர். எம் நிறுவனம் என்பன மூன்று மனுக்களை தாக்கல் செய்திருந்தன. லங்கா ஹொஸ்பிட்டல்ஸ் பங்குகளை விற்பதற்கு எதிராக லைகா லீசிங் ஹோல்டிங்ஸ் உட்பட இரண்டு மனுக்கள் தாக்கல் செய்யப்பட்டன.

தாங்கள் இந்த நிறுவனத்தின் பங்குகளை வாங்குவதற்காக சமர்ப்பித்திருந்த விண்ணப்பங்களை எந்தவொரு தெளிவான விளக்கத்தையும் வழங்காமல் அமைச்சரவை நிராகரித்ததாக மனுதாரர்கள் குற்றம் சாட்டினர். இந்த முடிவு சட்டத்துக்கு எதிரானது என்றும் அவர்கள் கூறியுள்ளனர்.

மனுதாரர்கள் முன்வைத்த உண்மைகளை கருத்தில் கொண்ட மேன்முறையீட்டு நீதிமன்றம், சிறீ லங்கா ரெலிக்கொம் மற்றும் லங்கா ஹொஸ்பிட்டல்ஸ் கோர்ப்பரேஷன் ஆகியவற்றில் இலங்கை அரசாங்கத்தின் பங்குகளை விற்பனை செய்வது தொடர்பான மேலதிக நடவடிக்கைகளைத் தடுக்கும் தடை உத்தரவை பிறப்பித்தது.

முதல் கோணல் முற்றிலும் கோணல் என்பதுபோல புலம்பெயர் தமிழர்களை முதலீடுகளை செய்ய முன்வாருங்கள் என்று அழைப்பு விடுத்துக்கொண்டே, அவ்வாறு முதலிட வருபவர்களை ஏற்றுக்கொள்ளாமல் விடுவது தொடர்ந்து புலம்பெயர் தமிழர்கள் முதலீடுகளை செய்ய முன்வருவதை தடுக்கலாம் என்றார் மற்றுமொரு புலம்பெயர் தொழில் அதிபர்.

இந்த இரண்டு நிறுவனங்களையும் லைக்கா நிறுவனமே கொள்வனவு செய்யும் என்று எதிர்பார்க்கப்பட்டிருந்த நிலையில் ஏன் இவ்வாறு திடீரென்று அரசு - அமைச்சரவை இவ்வாறு முடிவை எடுத்தது என்பது இதுவரை தெரியவரவில்லை. என்றாலும் இது குறித்து பல்வேறு ஊகங்கள் தெற்கில் நிலவிவருகின்றன.

பிரிட்டனில்கூட அரசியல் கட்சிகளுக்கு நன்கொடை வழங்கியவர்கள் இந்த லைக்கா நிறுவனத்தினர் என்பது பகிரங்கமான விடயம்தான். பிரிட்டனின் கொன்சர்வேட்டிவ் கட்சிக்கு தேர்தல் பிரசாரத்துக்காக பல இலட்சம் பவுண்ஸ்களை நன்கொடையாக இந்த நிறுவனம் வழங்கிய விவகாரம் பிரிட்டனில் பிரபல்யமானது.

அத்தகைய அந்த நிறுவனம் இலங்கையிலும் அரசியல் கட்சிகளையும் ‘வளைத்துப் போடும்’ முயற்சியில் ஈடுபட்டிருந்ததாகவும், ஆளும் கட்சியுடன் நெருக்கமாகியிருந்தபோதிலும் ஏனைய கட்சிகளுக்கும் அவர்கள் நிதிஉதவி செய்த விவகாரம் புலனாய்வு துறை ஊடாக அரசுக்கு தெரியவந்ததைத் தொடர்ந்தே, ஜனாதிபதி தரப்பில் இவ்வாறு முடிவெடுக்கப்பட்டதாக தெற்கில் ஊடகவியலாளர் ஒருவர் தகவல் தந்தார்.

இந்த நிலையில் அரசாங்கத்துடன் நீதிமன்றம் ஊடாக மோதுவதற்கு அவர்கள் முடிவு செய்திருப்பது எத்தகைய விளைவுகளைத் தரும் என்பது தெரியவில்லை.

**- ஊர்க்குருவி.**

## சாந்தனின் வித்துடல் ஊர்தி வவுனியாவிலிருந்து தீருவில் வரை...!



ஈழநாடு
Eelanadu
04.03.2024 திங்கட்கிழமை
சோபகிருது வருடம், மாசி 21

**“ஏசுவார்கள், எரிப்பார்கள், அஞ்சவேண்டாம்**
**உண்மையை எழுதுங்கள்; உண்மையாய் எழுதுங்கள்”**
- யோகர் சுவாமிகள்.

**E-mail: eelanaduweekly@gmail.com**
**தொலைபேசி : 021 205 2300**

# தமிழர்கள் உருப்பட வழியில்லையா?

இந்திய பெருங்கடலின் பாதுகாப்புக்கான இரண்டாவது கடற்படை கப்பலொன்றை அரசாங்கம் அனுப்பி வைக்கவுள்ளது. இஸ்ரேல் - பலஸ்தீன பிரச்னைக்கு இரு அரசுகள் தீர்வை ஆதரிப்பதாகக் கூறிவரும் இலங்கை அரசாங்கம் - மறுபுறம் செங்கடலில் ஈரானிய ஆதரவு ஹூதிகளின் கடல் பயங்கரவாதத்தை தோற்கடிக்கும் அமெரிக்க நடவடிக்கைகளுக்கு ஆதரவாக கடற்படையை அனுப்புகின்றது. ஒரே நேரத்தில், ‘குளோபல் சவுத்’ நாடுகளின் தலைமையாக எழுச்சியுற்றியிருக்கும் இந்தியாவுடன் மிகவும் நெருக்கமான உறவுகளை பேணிக் கொள்ளும்போது மறுபுறம் அமெரிக்காவின் உலகளாவிய நகர்வுகளுக்கும் ஆதரவான நிலைப்பாட்டை காண்பிக்கும் வகையில் மிகவும் கவனமாக செயல்பட்டு வருகின்றது.

இதேவேளை, சீனாவுடன் அதிகம் எட்டச் சென்றுவிடாத வகையிலான நகர்வையும் பாதுகாத்துக் கொள்கின்றது. இந்த நகர்வுகளின் மூலம்தான் சர்வதேச அழுத்தங்கள் தங்களைத் தாக்கிவிடாத வகையில் இலங்கையைப் பாதுகாத்துக் கொள்கின்றது. அரசியலில் நண்பர்களின் முக்கியத்துவம் எத்தகையது என்பதை இலங்கை இராஜதந்திரம் கற்றுத் தேர்ந்திருக்கின்றது. ஒரு காலத்தில் சிங்கள அரசியல்வாதி ஒருவர் கூறினார். எங்களின் மூதாதையர்கள் எங்களுக்கு கற்றுத் தந்திருக்கும் இராஜதந்திர ஆற்றலே எங்களின் சொத்தாகும் - அது உண்மைதான்.

ஆனால், தமிழ் மக்களை திரும்பிப் பார்த்தால் ஏமாற்றமே மிஞ்சுகின்றது. ஒரு காலத்தில் கல்வியில் உயர்ந்தவர்கள் என்றும் சிங்களவர்களை மூடர்கள் என்றும் கூறிக்கொள்வதில் பெருமைப்பட்டுக்கொண்ட தமிழ் சமூகத்தின் அரசியல் புரிதலோ மற்றவர்கள் எள்ளிநகையாடக் கூடிய நிலையிலேயே இருக்கின்றது. விதியே இந்த தமிழ் சமூகத்தை என்ன செய்ய நினைத்தாய் என்று புத்தியுள்ள மனிதர்கள் ஒவ்வொருவரும் புலம்பும் நிலைக்கே தமிழ் சமூகம் வந்து சேர்ந்திருக்கின்றது.

மலையக தொழிலாளர் காங்கிரஸின் தலைவர்களின் ஒருவரான ஜீவன் தொண்டமான் இந்திய அரசாங்கத்தின் கலாசார அமைச்சின் இராமாயண சித்திர காவிய நிகழ்வை புதுடில்லியில் உத்தியோகபூர்வமாக ஆரம்பித்து வைத்து புதுடில்லி - இலங்கை உறவை பலப்படுத்துவதற்காக உழைப்போம் என்று பேசியிருக்கின்றார். ஆனால், தமிழ் சூழலிலோ தமிழ் மக்களுக்கு நண்பர்கள் என்று எவருமே இருந்துவிடக்கூடாது - தமிழ் சமூகத்தின் எதிர்கால அரசியல் இருப்பை நாங்கள் கருவறுக்காமல் விடமாட்டோம் என்னும் அடிப்படையில்தான் விடயங்கள் இடம்பெறுகின்றன. தேவையற்ற எதிர்ப்பு அரசியல் சிந்தனைகளை இளைய தலைமுறையினர் மத்தியில் விதைக்கும் வகையிலான செயல்பாடுகள் முன்னெடுக்கப்படுகின்றன.

இதனை நெறிப்படுத்த வேண்டிய அரசியல் தலைவர்கள், புத்திஜீவிகள், கருத்துருவாக்கிகள், சிவில் சமூக பிரதிநிதிகள் என்போர் வாய்மூடிக் கிடக்கின்றனர். மார்ட்டின் லூதர் கிங் கூறியது தமிழ் சமூகத்துக்கு அச்சொட்டாக பொருந்திப் போகிறது - “நமது காலத்தின் துயரம் தீயவர்கள் அல்ல. ஆனால், அந்தத் தீமைகளை கண்டும், மௌனம் காக்கின்றார்களே நல்லவர்கள் என்போர்” - அவர்கள்தான் நமது பிரச்னையாகும்.

ஒரு சமூகத்தின் வளர்ச்சிக்கான சிந்தனையை செப்பனிடும் உளிகள்தான் அறிவுஜீவிகள் என்போர். சமூகம் தவறான பாதையில் பயணிக்க எத்தனிக்கும்போது அதனை பொறுப்புடன் சுட்டிக்காட்டி - கண்டிக்க வேண்டிய இடத்தில் கண்டித்து - நிராகரிக்க வேண்டிய விடயங்களை நிராகரித்து - சமூகத்தின் சிந்தனைப் போக்கை சரியான பாதையில் பயணிக்கச் செய்வதே அவர்களின் தலையாய கடமையாகும்.

தமிழ்த் தேசிய அரசியல் எப்போது ஏகப்பிரதிநிதித்துவம் என்னும் நோயால் மோசமாக பாதிக்கப்பட்டதோ அப்போதே தமிழ் சமூகத்தின் அரசியல் ஆன்மா சிதைவடையத் தொடங்கிவிட்டது. இப்போது, அதன் எச்சங்களால் அரசியல் தொடர்ந்தும் உருக்குலைந்து போய்க் கொண்டிருக்கின்றது. பொறுப்புள்ள ஒவ்வொருவரும் இதனை தட்டிக் கேட்கத் துணியாது விட்டால் தமிழ் இனம் என்று சொல்லிக் கொள்வதற்கு எதுவுமிருக்காது. வடக்கு - கிழக்கில் தமிழர்களும் வாழ்கின்றார்கள் என்னும் நிலைமையே ஏற்படும்.

# பொலிஸ் அதிகாரம் தவிர்ந்த ஏனைய அதிகாரங்களுடன் 13!



## ரணிலின் கருத்து நேர்மையானதல்ல என்கிறார் விக்னேஸ்வரன்

கொழும்பு, மார்ச் 04

13ஆவது திருத்தத்தில் பொலிஸ் அதிகாரம் தவிர்ந்த ஏனைய சகல அதிகாரங்களையும் வழங்குவதற்கு தனது அரசாங்கம் தயாராக இருப்பதாக ஜனாதிபதி வெளியிட்ட கருத்து நேர்மையானதல்ல. அவருக்கு ஜெனிவாவில் சர்வதேச சமூகத்தை சமாதானப்படுத்த வேண்டும். அதேபோன்று ஜனாதிபதி தேர்தலில் தமிழ் மக்களின் வாக்குகள் வேண்டும். அதனைத் தாண்டி பொலிஸ் அதிகாரத்துடனோ அல்லது பொலிஸ் அதிகாரம் இன்றியோ அவர் எந்தவோர் அரசியல் உரிமையையும் தமிழர்களுக்கு வழங்கமாட்டார்.

இவ்வாறு தமிழ் தேசியக் கூட்டணியின் தலைவரும் பாராளுமன்ற உறுப்பினருமான க. வி. விக்னேஸ்வரன் தெரிவித்துள்ளார்.

அரசமைப்புக்கான 13ஆவது திருத்தத்தில் பொலிஸ் அதிகாரங்கள் தவிர்ந்த ஏனைய சகல அதிகாரங்களையும் வழங்குவதற்குத் தனது அரசாங்கம் தயாராக இருப்பதாக அண்மையில் ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்க தெரிவித்திருந்தார்.

இதுகுறித்து தனது நிலைப்பாட்டை தெளிவுபடுத்தி க. வி. விக்னேஸ்வரன் எம். பி. கூறுகையில்,

இது வேடிக்கையாக உள்ளது. அரசாங்கம் தருவதற்கென எதுவுமில்லை. 13ஆவது திருத்தம் என்பது எமது நாட்டு அரசமைப்பின் ஓர் அங்கமாகும். அதனை நடைமுறைப்படுத்துவது அரசாங்கத்தின் கடமையாகும். அவ்வாறிருக்கையில் அந்த அதிகாரங்களைத் தருவதாக ஜனாதிபதி கூறுவதன் மூலம் இலங்கை சுதந்திரமடைந்தது முதல் “சிங்களவர்களால் தெரிவுசெய்யப்பட்ட - சிங்களவர்களுக்கான சிங்கள அரசாங்கம்” எனும் இனவாதப் போக்கிலான அரசாங்கம் ஆட்சியில் இருந்துவந்திருப்பது உறுதிப்படுத்தப்பட்டுள்ளது.

மாகாண சபைகளுக்கான அதிகாரங்களை அடையாளம் காண்பது தொடர்பில் ஜனாதிபதி எம்முடன் ஆக்கபூர்வமான கலந்துரையாடல்களை முன்னெடுத்தார். இருப்பினும் அவை கலந்துரையாடல் என்ற எல்லையை தாண்டவில்லை. மாகாண சபைகளிடமிருந்து பறிக்கப்பட்ட அல்லது மீள வழங்கப்பட வேண்டிய அதிகாரங்களைக் கண்டறிவதற்கான எந்தவொரு நடவடிக்கையும் முன்னெடுக்கப்படவில்லை. குறிப்பாக, இந்தப் பணிகளை முன்னெடுப்பதற்கு விசேட நிபுணர்கள் அடங்கிய குழுவை நியமிப்பதாகவும், மாகாண சபைகளுக்கு அவசியமான சட்டங்களை வகுப்பதாகவும் ஜனாதிபதி உத்தரவாதம் அளித்தார்.


எது எவ்வாறிருப்பினும் தற்போது ஜனாதிபதியால் வெளியிடப்பட்டுள்ள கருத்து அரசியல் சார்ந்த தன்மையைக் கொண்டிருக்கின்றது. அவர் ஜனாதிபதி தேர்தலின்போது எமது மக்களில் குறிப்பிட்டதொரு தரப்பினரிடமிருந்து ஆதரவை எதிர்பார்க்கின்றார். ஆனால், வெற்றி பெற்றதன் பின்னர் அவர் கொண்டிருக்கும் கடப்பாட்டை மறந்துவிடுவார். நான் தற்போதைய ஜனாதிபதியை மாத்திரம் குறைகூறவில்லை. முன்னைய ஜனாதிபதிகளும் இதனையே செய்தனர். அவர்களுக்கு தமிழ் பேசும் மக்களின் வாக்குகள் வேண்டும்.

அதனைத் தாண்டி தமிழர்களின் அபிலாசைகளைப் பூர்த்திசெய்வதில் அவர்களுக்கு நாட்டமில்லை. முன்னாள் ஜனாதிபதி சந்திரிகா பண்டாரநாயக்க குமாரதுங்க இதிலிருந்து வேறுபட்டவர் என்பதை நான் கூறியாக வேண்டும். அவரால் கொண்டுவரப்பட்ட அரசமைப்பு வரைவு அப்போதைய எதிர்க்கட்சித் தலைவர் ரணில் விக்கிரமசிங்கவின் கட்சியால் பாராளுமன்றத்தில் வைத்து எரிக்கப்பட்டது.

பொலிஸ் அதிகார விவகாரத்தில் தமிழ் மக்கள் அவர்களுக்குள் பிளவுபட வேண்டுமென ஜனாதிபதி எதிர்பார்க்கின்றார். மாகாண சபைகளுக்கான வரையறுக்கப்பட்ட அளவிலான பொலிஸ் அதிகாரம் அரசமைப்பில் ஏற்கனவே உள்ளடக்கப்பட்டுள்ளது. அந்தச் சட்டம் இறையாண்மையுடைய இரு தேசங்களுக்கு இடையில் எட்டப்பட்ட உடன்பாட்டின் விளைவாகும். எனவே ஏற்கனவே சட்டத்தில் இருக்கும் அதிகாரங்கள் தொடர்பில் ஜனாதிபதி எவ்வாறு பேரம் பேசுகின்றார் எனப் புரியவில்லை.

என்னைப் பொறுத்தமட்டில் ஜனாதிபதியின் கருத்து நேர்மையானதல்ல. மாறாக அவருக்கு ஜெனிவாவில் சர்வதேச சமூகத்தை சமாதானப்படுத்த வேண்டும். அதேபோன்று ஜனாதிபதி தேர்தலில் தமிழ் மக்களின் வாக்குகள் வேண்டும். அதனைத் தாண்டி பொலிஸ் அதிகாரங்களுடனோ அல்லது பொலிஸ் அதிகாரம் இன்றியோ அவர் எந்தவொரு அரசியல் உரிமையையும் தமிழர்களுக்கு வழங்கமாட்டார்- என்றார். (ஐ)

## அப்புக்குட்டி அண்ணையின் ‘டவுட்’



மார்ச் - 04 திங்கட்கிழமை
சோபகிருது வருடம் - மாசி 21
நல்ல நேரம் : 06.00 - 07.30
ராகு காலம் : 07.30 - 09.00
திதி : நவமி




**மேடம்**
சந்திராஷ்டமம் இருப்பதால் மற்றவர்களை நம்பி எந்த பொறுப்புகளையும் ஒப்படைக்க வேண்டாம். உத்தியோகத்தில் அவசர முடிவுகள் எடுக்க வேண்டாம். பொறுமைத் தேவைப்படும் நாள்.

**இடபம்**
உங்கள் பலம், பலவீனத்தை உணர்வீர்கள். கல்யாணப் பேச்சு வார்த்தை வெற்றியடையும். மேலதிகாரி உங்களை நம்பி சில பொறுப்புகளை ஒப்படைப்பார். திறமைகள் வெளிப்படும் நாள்.

**மிதுனம்**
குடும்பத்தில் உங்கள் வார்த்தைக்கு மதிப்பு கூடும். அரசால் அனுகூலம் உண்டு. உத்தியோகத்தில் உங்களின் புதிய முயற்சிகளை அதிகாரி பாராட்டுவார். தொட்டது துலங்கும் நாள்.

**கடகம்**
புதிய முயற்சிகள் யாவும் வெற்றியடையும். பிள்ளைகளின் உயர்கல்வி உத்யோகம் குறித்து யோசிப்பீர்கள். உத்தியோகத்தில் சூட்சுமங்களை உணர்வீர்கள். கனவு நனவாகும் நாள்.

**சிம்மம்**
எதிர்பார்த்தவைகளில் சில தள்ளிப் போனாலும் எதிர்பாராத ஒரு வேலை முடியும். தாயாருடன் கருத்து மோதல்கள் வந்து செல்லும். எதிர்பார்த்த சலுகைகள் கிடைக்கும். உயர்வு பெறும் நாள்.

**கன்னி**
துணிச்சலாக சில முக்கிய முடிவுகள் எடுப்பீர்கள். உடன்பிறந்தவர்கள் உங்கள் வேலைகளைப் பகிர்ந்துக் கொள்வார்கள். உங்கள் கருத்துக்கு ஆதரவு பெருகும். வெற்றிக்கு வித்திடும் நாள்.

**துலாம்**
இதுவரை இருந்த அலைச்சல் டென்ஷன் கோபம் யாவும் நீங்கும். வியாபாரத்தில் புது முதலீடு செய்வீர்கள். உங்கள் உழைப்பிற்கு அங்கீகாரம் கிடைக்கும். உற்சாகமான நாள்.

**விருட்சிகம்**
ராசிக்குள் சந்திரன் செல்வதால் வேலைச் சுமை இருந்து கொண்டே இருப்பதாக ஆதங்கப்படுவீர்கள். உத்தியோகத்தில் அதிகாரிகளுடன் அளவாக பழகுங்கள். திட்டமிட்டு செயல்பட வேண்டிய நாள்.

**தனுசு**
விடாப்பிடியாக செயல்பட்டு சில வேலைகளை முடிப்பீர்கள். வியாபாரத்தில் போட்டிகளையும் தாண்டி ஓரளவு லாபம் வரும். உத்தியோகத்தில் மேலதிகாரியுடன் மோதல்கள் வேண்டாமே.

**மகரம்**
எதிர்பார்ப்புகள் நிறைவேறும். பெற்றோர் பக்கபலமாக இருப்பார்கள். வியாபாரத்தில் பழைய வாடிக்கையாளர்கள் தேடி வருவார்கள். உத்தியோகத்தில் உங்கள் கை ஓங்கும். புகழ் கௌரவம் கூடும்.

**கும்பம்**
அனுபவ பூர்வமாகவும் அறிவுப் பூர்வமாகவும் பேசி எல்லோரையும் கவர்வீர்கள். பவிஜபிகள் அறிமுகமாவார்கள். உங்கள் கை ஓங்கும். அதிகாரியின் நம்பிக்கையை பெறுவீர்கள்.

**மீனம்**
கணவன் - மனைவிக்குள் இருந்த மனப்போர் நீங்கும். பணப்புழக்கம் கணிசமாக உயரும். வியாபாரத்தில் போட்டிகள் குறையும். உத்தியோகத்தில் மேலதிகாரி மதிப்பார். மகிழ்ச்சியான நாள்.

# முதல்வர் ஸ்டாலின் ஏற்றால் தி. மு. கவுடனும் கூட்டணி!

## பாரதிய ஜனதா கட்சி அறிவிப்பு

நாகர்கோவில், மார்ச் 04

''ஸ்டாலின் ஒப்புக் கொண்டால் தி.மு.கவுடன்கூட கூட்டணி வைப்போம்,'' என்று மத்திய அமைச்சர் வி.கே. சிங் கூறினார்.

மத்திய அரசை ஆளும் கட்சியான பா. ஜ. கவின் மூத்த அமைச்சர்களுள் ஒருவரான வி. கே. சிங் நேற்றுமுன்தினம் தமிழ்நாட்டின் நாகர்கோவிலுக்கு வந்தார். இதன்போது கருத்து வெளியிட்ட அவர்,

“தேர்தல் தோல்வி பயத்தில் பிரதமர் மோடி உள்ளதாக முதல்வர் ஸ்டாலின் கூறியுள்ளார். ஸ்டாலினுக்கு உள்ள தேர்தல் பயத்தில்தான் அவர் இவ்வாறு பேசி வருகிறார். தமிழகத்தில் தி. மு. க. குடும்ப அரசியல் நடத்தி வருகிறது .

மக்கள் நலனை கருத்தில் கொண்டு, எந்தக் கட்சி வந்தாலும் கூட்டணியில் இணைத்துக் கொள்ள பாரதிய ஜனதா தயாராக உள்ளது. அதில் தி. மு. க., அ. தி. மு. க. என்ற வேறுபாடு எதுவும் கிடையாது. தி. மு. கவுடன் கூட்டணி என்றால், ஸ்டாலின் ஒப்புக் கொள்ள வேண்டும் - என்றார்.

(ஐ)

# பன்னீர்செல்வத்தின் மனு தள்ளுபடி!

புதுடில்லி, மார்ச் 04

வருமானத்துக்கு மேலதிகமாக சொத்து சேர்த்த வழக்கை உயர்நீதிமன்றம் விசாரிக்கக்கூடாது என்று கோரி முன்னாள் முதலமைச்சர் ஓ. பன்னீர்செல்வம் தொடுத்த மனுவை உச்சநீதிமன்றம் தள்ளுபடி செய்துள்ளது.

கடந்த 2001-2006ஆம் ஆண்டுகளில் அ. தி. மு. க. ஆட்சியில் வருவாய்த்துறை அமைச்சராக பதவி வகித்த ஓ. பன்னீர்செல்வம் வருமானத்துக்கு அதிகமாக ஒரு கோடியே 77 இலட்சம் (இந்திய) ரூபாய் சொத்துகள் குவித்தார் என்று 2006இல் தி. மு. க. ஆட்சி காலத்தில் இலஞ்ச ஒழிப்புத்துறை வழக்குப்பதிவு செய்தது.

இந்த வழக்கில் அவர் உட்பட அவரின் உறவினர்களை 2012இல் சிவகங்கை நீதிமன்றம் விடுவித்தது. இந்த உத்தரவை மறு ஆய்வு செய்வது தொடர்பாக சென்னை உயர்நீதிமன்ற நீதிபதி ஆனந்த் வெங்கடேஷ் தாமாக முன்வந்து வழக்கை விசாரணைக்கு எடுத்தார்.

இந்த வழக்கை விசாரிக்கக் கூடாது என்று உயர்நீதிமன்றுக்கு உத்தரவிடக்கோரி முன்னாள் முதலமைச்சர் ஓ. பன்னீர்செல்வம் சார்பில் உச்ச நீதிமன்றத்தில் மேன்முறையீடு செய்தார்.

இரு தரப்பு வாதங்களை கேட்ட நீதிபதிகள், ஓ. பன்னீர்செல்வத்தின் மேல்முறையீடு மனுவை தள்ளுபடி செய்து உத்தரவிட்டனர். (ஐ)

# இன்று சென்னை வருகிறார் மோடி!

சென்னை, மார்ச் 04

சென்னை நந்தனத்தில் இன்று நடைபெறும் பாரதிய ஜனதா கட்சியின் பொதுக்கூட்டத்தில் பிரதமர் நரேந்திர மோடி கலந்துகொள்கிறார்.

இதன்படி, இந்திய பிரதமர் நரேந்திர மோடி மதியம் 1.15 மணிக்கு மராட்டியத்தில் இருந்து விமானம் மூலம் புறப்பட்டு சென்னை வருகிறார். மாலை நேரம் பொதுக்கூட்டத்தில் பங்கேற்பார். அதன் பின்னர் இரவு 7 மணியளவில் விமானம் மூலம் தெலுங்கானா புறப்படுவார். (ஐ)

# தி. மு. க. கூட்டணியிலேயே தொடர்ந்து பயணிப்போம்!

## திருமாவளவன் தெரிவிப்பு

சென்னை, மார்ச் 04

“நாங்கள் தி. மு. க. கூட்டணியில்தான் இருக்கிறோம். தொடர்ந்து தி. மு. க. கூட்டணியில்தான் பயணிப்போம். இந்தத் தேர்தலை தி. மு. க. தலைமையிலான ‘இந்தியா’ கூட்டணியில் இணைந்துதான் எதிர்கொள்வோம். எங்களுக்கு கூடுதல் தொகுதிகளை ஒதுக்க வேண்டும் என்று கேட்கிற உரிமை - தேவை உள்ளது. இரண்டு தொகுதிகளுக்கு மேலாக கொடுக்க மறுத்தால் நாங்கள் திரும்பத் திரும்ப கேட்போம்” என்று விடுதலைச் சிறுத்தைகள் கட்சித் தலைவர் திருமாவளவன் தெரிவித்துள்ளார்.

தொகுதிப் பங்கீடு தொடர்பாக தி. மு. கவுடனான பேச்சு நடைபெறாத நிலையில் விடுதலை சிறுத்தைகள் கட்சியின் உயர்நிலை கூட்டத்தின் பின்னர் தொல். திருமாவளவன் மேற்கண்டவாறு கூறினார்.

மேலும், “கட்சியின் உயர் நிலைக் குழு கூட்டம் முடிய தாமதமானதால் தொகுதிப் பங்கீட்டு பேச்சில் பங்கேற்க முடியவில்லை. எனினும், ஓரிரு நாட்களில் மீண்டும் பேச்சுநடத்தப்படும். கூட்டணி தொடர்பாக முதல்வர் ஸ்டாலினை சந்திக்கும் தேவை இருந்தால் சந்திப்போம். கட்சிக் கூட்டத்தில் கூடுதல் தொகுதிகளை கேட்டுப் பெற வேண்டும் என விடுதலை சிறுத்தைகள் கட்சி நிர்வாகிகள் வலியுறுத்தியது உண்மைதான்.

தொகுதிப் பங்கீட்டில் தி. மு. க. அவசரம் காண்பிக்கவில்லை. கொள்கை புரிதலோடு இருக்கிற கட்சிகள் தான் தி. மு. க. கூட்டணியில் உள்ளனர். எனவே, கூட்டணிக்குள் எந்த குழப்பமோ, அவசரமோ, பதற்றமோ கிடையாது - என்றார்.

# அ. தி. மு. க., பா. ஜ. கவுடன் பேச்சு நடைபெறுகின்றது!

## சரத்குமார் அறிவிப்பு

மதுரை, மார்ச் 04

“அ. தி. மு. க., பா. ஜ. கவுடன் கூட்டணி பேச்சு நடைபெற்று வருகிறது. தேர்தல் திகதி அறிவிப்புக்குப் பிறகு கூட்டணி அறிவிக்கப்படும்” என சமத்துவ மக்கள் கட்சி தலைவர் சரத்குமார் தெரிவித்தார்.

சமத்துவ மக்கள் கட்சி தலைவர் நிகழ்வு ஒன்றின் பின்னர் செய்தியாளர்களை சந்தித்த போது தெரிவித்தவை வருமாறு,

“தி. மு. க. தவிர அ. தி. மு. க., பா. ஜ. க. நிர்வாகிகள் என்னிடம் கூட்டணி பேச்சு நடத்தி வருகின்றனர். தேர்தல் திகதி அறிவிக்கப்பட்ட பிறகு கூட்டணி அறிவிக்கப்படும். மக்களின் முன்னேற்றம், வேலை வாய்ப்பை அதிகரிக்க வேண்டும், தொழில் வளத்தை அதிகரிக்க வேண்டும் என்பது எங்களின் பிரதான கோரிக்கையாக உள்ளது.

தமிழகத்தில் மட்டும் அல்ல, கேரளா, ஆந்திரா உள்ளிட்ட தென் மாவட்டங்களிலும் போதை கலாசாரம் பெருகியுள்ளது. இதில் தொடர்புடையவர்கள் மீது கடும் நடவடிக்கை எடுத்தால்தான் கட்டுப்படுத்த முடியும். பின்னணியில் பெரும் புள்ளிகள் இருந்தாலும் நடவடிக்கை எடுக்க வேண்டும் - என்றார். (ஐ)

ஈழநாடு



# புலம்பெயர்ந்தவர்களும் வாக்களிப்பதற்கு வாய்ப்பு

## தேர்தல்கள் ஆணையாளர் சாதக பதில்



கொழும்பு, மார்ச் 04

**நாட்டில் நடக்கும் தேர்தல்களில் வெளிநாட்டில் வசிக்கும் இலங்கையர்கள் வாக்களிக்க அனுமதி வழங்கப்பட வேண்டும் என்ற கோரிக்கைக்கு தேர்தல்கள் ஆணையாளர் சமன் ரத்நாயக்க சாதகமான பதில் அளித்துள்ளார் என்று சிவில் அமைப்புகள் தெரிவித்துள்ளன.**

அத்துடன், தொழில் நிமித்தம் பல இலங்கையர்கள் வெளிநாடுகளில் வசித்து வருகின்றனர். இவர்களை விட இரட்டைப் பிரஜாவுரிமை பெற்ற பலரும் வாழ்ந்து வருகின்றனர்

இவர்கள் அனைவரும் வாக்களிப்பதற்கு ஏற்பாடு செய்யப்பட வேண்டும் என சிவில் அமைப்புகள் கோரிக்கை விடுத்திருந்தன. (ஐ)

# மகிந்த மீதான நம்பிக்கையில்லா பிரேரணை நாளை கையளிப்பு!



கொழும்பு, மார்ச் 04

சபாநாயகர் மகிந்த யாப்பா அபேவர்த்தனவுக்கு எதிராக கைச்சாத்திடப்பட்டுள்ள நம்பிக்கையில்லா பிரேரணை நாளை செவ்வாய்க்கிழமை கையளிக்கப்படவுள்ளதாக எதிர்கட்சியின் பிரதம கொறடாவும் கண்டி மாவட்ட பாராளுமன்ற உறுப்பினருமான லக்ஷ்மன் கிரியெல்ல தெரிவித்துள்ளார்.

தீர்மானத்தில் கையெழுத்திடும் பணிகள் நிறைவடைந்துள்ளன என்றும் அவர் கூறினார்.

இந்தப் பிரேரணைக்கு ஐக்கிய மக்கள் சக்தி, விமல் வீரவன்ஸவின் கட்சி, சிறீ லங்கா சுதந்திரக் கட்சி உட்பட பல எதிர்க் கட்சிகள் ஆதரவளிக்க ஏற்கனவே முடிவு செய்துள்ளமை குறிப்பிடத்தக்கது. (ஐ)

# சிறீ லங்கன் எயார்லைன்ஸில் இரு விமானங்கள் இணைவு!

கொழும்பு, மார்ச் 04

சிறீ ங்கன் எயார் லைன்ஸில் தற்போது நிலவும் விமானப் பற்றாக்குறையை நிவர்த்தி செய்யும் வகையில் பெல்ஜியம் எயார் லைன்ஸின் இரண்டு விமானங்கள் குத்தகை அடிப்படையில் சேவையில் இணைக்கப்பட்டுள்ளன.

ஏ-330-200 எயார் பஸ் வகையைச் சேர்ந்த இந்த விமானங்கள் பெல்ஜிய ஏயார்லைன்ஸ் விமானிகளால் இயக்கப்படுகின்றன.

இந்த விமானங்களில் 22 வணிக வகுப்பு இருக்கைகளும், 240 பொருளாதார வகுப்பு இருக்கைகளும் உள்ளன.

இதற்கு மேலதிகமாக, பிற்ஸ் எயார் ஏ -320 ரக விமானமும் சிறீ லங்கன் எயார் லைன்ஸ் நிறுவனத்தால் தற்காலிகமாக குத்தகைக்கு எடுக்கப்பட்டு சேவையில் ஈடுபடுத்தப்பட்டுள்ளது. (ஐ)

# கடன் மீளாய்வுக்காக ஐ. எம். எவ் குழு வியாழனன்று இலங்கை வருகின்றது!

கொழும்பு, மார்ச் 04

300 கோடி டொலருக்கான இரண்டாம் தவணை மீளாய்வுக்காக சர்வதேச நாணய நிதியத்தின் (ஐ. எம். எவ்.) குழு எதிர்வரும் வியாழக்கிழமை நாட்டுக்கு வருகை தருகிறது.

இந்தப் பயணத்தின் போது, சர்வதேச நாணய நிதியத்தின் குழு, எதிர்வரும் 7 ஆம் திகதி ஆரம்பிக்கப்படவுள்ள விரிவாக்கப்பட்ட நிதி வசதி திட்டத்தின் இரண்டாவது மீளாய்வு பணிகளை ஆரம்பிக்கவுள்ளது.

இந்தத் தகவலை நிதி இராஜாங்க அமைச்சர் ஷெஹான் சேமசிங்க தெரிவித்துள்ளார்.

எதிர்வரும் வியாழக்கிழமை இலங்கை வரும் ஐ. எம். எவ். குழு இரு வாரங்கள் 300 கோடி டொலருக்கான இரண்டாம் தவணை மீளாய்வு நடவடிக்கையில் ஈடுபடும். சர்வதேச நாணய நிதியத்தின் கடனுக்கான இலங்கையின் இரண்டாவது மீளாய்வு, பொருளாதார மீட்சிக்கு தேவையான பல சீர்திருத்தங்களை இலங்கை அரசாங்கம் அமுல்படுத்தியுள்ளது.

இதனால் இரண்டாவது பரிசீலனை மார்ச் 7 முதல் தொடங்கும், இது முதல் மதிப்பாய்வை விட சுமுகமான மதிப்பாய்வாக இருக்கும் என்று நாங்கள் மிகவும் நம்புகிறோம் - என்றார். (ஐ)

# இரணைமடுக்குளத்தின் மேல் ட்ரோன் பறக்கவிட்டவர் கைது!

கிளிநொச்சி, மார்ச் 04

கிளிநொச்சி பொலிஸ் பிரிவில் இரணைமடுக்குளத்தை படம் பிடித்த இளைஞன் ஒருவர் அனுமதியின்றி ட்ரோன் கமெராவை வானில் பறக்க விட்ட குற்றச்சாட்டில் கைது செய்யப்பட்டுள்ளார்.

யாழ்ப்பாணம் அச்சுவேலியை சேர்ந்த 24 வயது இளைஞரே இவ்வாறு கைது செய்யப்பட்டுள்ளார்.

அவர் நேற்றுமுன்தினம் இரணைமடுக் குளத்தை ட்ரோன் கமெராவால் படம்பிடித்த போது, இரணைமடுவிலுள்ள தமது இராணுவ முகாமை படம் பிடித்ததாக குறிப்பிட்டு, இராணுவத்தினரால் பிடிக்கப்பட்டு, கிளிநொச்சி பிராந்திய பொலிஸ் அத்தியட்சகர் அலுவலகத்தில் ஒப்படைத்தனர். (ஐ)

# இந்திய ஒத்துழைப்புடன் வடக்கில் அபிவிருத்திகள்

## முன்னாள் வடக்கு ஆளுநர் முன்மொழிவு



கொழும்பு, மார்ச் 03

இந்தியாவின் ஒத்துழைப்புடன் வட மாகாணத்தில் பெரும் அபிவிருத்தி திட்டங்களை முன்னெடுக்கும் முன்மொழிவுகளை முன்னாள் ஆளுநர் ஜீவன் தியா ராஜா ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவுக்கு அனுப்பிவைத்துள்ளார்.

வடக்கில் முன்னெடுக்கும் இந்தத் திட்டங்களை ஏனைய மாகாணங்களிலும் முன்னெடுப் பதன் ஊடாக சமாந்தரமான வளர்ச்சிகள் ஏற்படும் - என்றும் அவர் கூறியுள்ளார்.

அவரின் முன்மொழிவுகளில்,

இந்தியாவின் சந்தையில் பிரவேசிக்கும் வகையில் இந்திய மத்திய அரசுடனான உறவுகள், இந்திய மாநிலங்களுடனான உறவுகள், இந்திய வணிகத்துறையினருடான உறவுகள் தொழில்நுட்பம் உட்பட பல் வேறுபட்ட பரந்துபட்ட துறைகளில் நிதியுதவி உள்ளிட்ட ஒத்துழைப்புகளை பெறுவது நோக்கமாக உள்ளது. இதன் மூலமாக வடக்கு மாகாணத்தின் வளர்ச்சி தூண்டப்பட்டு அது பொருளாதார ரீதியான எழுச்சியை அடைவதற்கு வழி சமைக்கும்.

அதேநேரம் ஒரே நேரத்தில் வட மாகாணத்தில் சிறப்புப் பொருளாதார வலயங்களை நிறுவும் பணிகளை முன்னெடுக்க முடியும். வடக்கு மாகாண பொருளாதாரத்தை மேம்படுத்துவதை அடிப்படையான இலக்காகக் கொண்டு, தமிழ்நாடு கடந்த ஆண்டு செய்தது போன்று இலங்கை, இந்தியா மற்றும் பிற கண்டங்களை சேர்ந்த வளவாளர்களை ஒருங்கிணைத்து 'கற்பனை வட மாகாணம்' என்றோர் அமர்வை நடத்துவதைப் பற்றி பரிசீலிக்க வேண்டும்.

அந்த மாநாட்டை வட மாகாணத்தில் அல்லது இந்தியாவில் நடத்தலாமா என்பது குறித்து சிந்திக்கும் அதேநேரம், பல்வேறு துறை சார்ந்த நிபுணத்துவ மூலங்களில் இருந்து பல ஆண்டுகள் மேம்பாட்டு ஒத்துழைப்பை அமைப்பது தொடர்பாக மாநாட்டில் கலந்துரையாடி வழிவரைபடத்தை தயாரிக்கலாம் - என்றுள்ளது. (ஐ)

# 10 கோடி ரூபாய் பெறுமதியான ஐஸ் போதையுடன் மூவர் கைது!

கொழும்பு, மார்ச் 04

பொலிஸ் விசேட அதிரடிப் படையினர் கொழும்பில் மேற்கொண்ட சுற்றிவளைப்பில் 9 கிலோ ஐஸ் போதைப்பொருட்களுடன் மூவர் கைது செய்யப்பட்டுள்ளனர்.

கைப்பற்றப்பட்ட போதைப் பொருளின் சந்தைப் பெறுமதி சுமார் 10 கோடி ரூபாய் என்று பொலிஸார் தெரிவித்தனர்.

கைது செய்யப்பட்ட சந்தேகநபர்களும் கைப்பற்றப்பட்ட போதைப்பொருட்களும் மேலதிக விசாரணைகளுக்காக பொலிஸ் போதைப்பொருள் ஒழிப்புப் பிரிவினரிடம் ஒப்படைக்கப்பட்டன. (ஐ)

# சடலம் மீட்பு!

கொழும்பு, மார்ச் 04

வயலில் சந்தேகத்துக்கிடமான நிலையில் உயிரிழந்த ஒருவரின் சடலம் மீட்கப்பட்டுள்ளது.

அநுராதபுரம் - நொச்சியாகமவில் இந்தச் சடலம் நேற்று முன்தினம் மீட்கப்பட்டது.

இவ்வாறு சடலமாக மீட்கப்பட்டவர் அதே இடத்தைச் சேர்ந்த 35 வயது நபராவார்.

வயலுக்கு செல்வதாக கூறி வீட்டை விட்டு சென்றவர் வீடு திரும்பாததால் அவரது மனைவி நொச்சியாகம பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்துள்ளார். (ஐ)

# வீட்டின் சுவர் இடிந்து இளைஞன் மரணம்!

சிலாபம், மார்ச் 04

வீட்டின் சுவர் வீழ்ந்து இளைஞன் ஒருவர் உயிரிழந்தார் என்று பொலிஸார் தெரிவித்தனர்.

புத்தளம் - உடப்பு - உடப்பு, 5ஆம் வட்டாரத்தைச் சேர்ந்த 18 வயதுடைய முத்துச்செல்வம் தனுஜன் எனும் இளைஞனே இவ்வாறு உயிரிழந்தவராவார்.

உடைக்கப்பட்ட வீட்டின் சுவர் பகுதியளவில் நின்றிருந்தது. அந்த சுவரின் அருகே இளைஞர் நின்றபோதே சுவர் இடிந்து விழுந்துள்ளது.

படுகாயமடைந்த இளைஞனை உடப்பு பிரதேச மருத்துவமனையில் சேர்ப்பித்தனர். அவர் அங்கிருந்து சிலாபம் பொது மருத்துவமனைக்கு மாற்றப்பட்டபோது உயிரிழந்தார். (ஐ)

# 'போர்ட் சிற்றி'யில் முதலீடு பிரிட்டனுடன் உரையாடல்!

கொழும்பு, மார்ச் 04

**நாட்டில், குறிப்பாக கொழும்பு துறைமுக நகரத்திலும் (போர்ட் சிற்றி) முதலீடுகளை மேற்கொள்வதற்கான வாய்ப்புகள் குறித்து இலங்கை முதலீட்டு சபை மற்றும் கொழும்பு துறைமுக நகர பொருளாதார ஆணைக்குழுவின் தலைவருக்கும் பிரிட்டனின் பல்துறைசார் பிரதிநிதிகளுக்கும் இடையில் விரிவான கலந்துரையாடல் நடைபெற்றது.**

இலங்கை முதலீட்டு சபை மற்றும் கொழும்பு துறைமுக நகர பொருளாதார ஆணைக்குழுவின் தலைவர் தினேஷ் வீரக்கொடி கடந்த மாத இறுதியில் பிரிட்டனுக்கு சென்றார். அங்கு வர்த்தகம் மற்றும் முதலீட்டுத் துறைசார் முக்கிய சந்திப்புகளில் ஈடுபட்டிருந்தார். இலங்கை - பிரிட்டனுக்கு இடையிலான பொருளாதாரத் தொடர்புகளை வலுப்படுத்தல் மற்றும் இரு நாடுகளுக்கும் இடையிலான ஒத்துழைப்பு வாய்ப்புக்களை அடையாளம் காணல் என்பவற்றை இலக்காகக் கொண்ட இந்தச் சந்திப்புகள் கடந்த மாதம் 24ஆம் திகதி பிரிட்டனில் உள்ள இலங்கை உயர்ஸ்தானிகராலயம் மற்றும் இலங்கை இல்லம் ஆகியவற்றில் நடைபெற்றன.

இலங்கை முதலீட்டுச் சபையின் தலைவருடன் இணைந்து இலங்கை உயர்ஸ்தானிகர் ரோஹித போகொல்லாகமவும் இந்த சந்திப்புகளில் பங்கேற்றிருந்தார்.

இந்த சந்திப்புக்களில் ஸ்டான்டர்ட் சார்ட்டட் வங்கி, வேர்த் துஸா கோப்பரேஷன், பிரிட்டன் - இலங்கை வங்கி, பிரிட்டன் வீட்டுப் பராமரிப்பு சேவை, டோவர் மரினா ஹோட்டல் மற்றும் ஸ்பா, பிரிட்டன் கார் பன் ட்ரக்கர் போன்ற முன்னணி கட்டமைப்புக்களின் பிரதிநிதிகள் கலந்துகொண்டனர். (ஐ)

# கசிப்பு காய்ச்சிய நால்வர் கைது!

கொழும்பு, மார்ச் 04

வீடொன்றில் கசிப்பு காய்ச்சிய நால்வரை பொலிஸார் கைது செய்துள்ளனர்.

சபுகஸ்கந்தை - மாகொல பிரதேசத்தில் கைது செய்யப்பட்ட நான்கு சந்தேகநபர்களும் களனி, வத்தளை, ஹோமாகம ஆகிய பிரதேசங்களை சேர்ந்த 20 முதல் 52 வயதுக்கு இடைப்பட்டவர்களாவர்.

கைதானவர்களிடம் இருந்து 312 லீற்றர் கசிப்பு, 5,580 லீற்றர் கோடா, 35 பீப்பாய்கள் மற்றும் 3 செப்பு கம்பிகள் கைப்பற்றப்பட்டன என்று விசேட அதிரடிப் படையினர் தெரிவித்தனர்.

சட்டவிரோதமாக மதுபானம் தயாரித்தல், மது உற்பத்திக்கு பயன்படுத்தப்படும் உபகரணங்களை வைத்திருந்தமை, விநியோகத்திற்காக மதுபானம் வைத்திருந்தமை ஆகிய குற்றச்சாட்டின் கீழ் சந்தேகநபர்கள் கைது செய்யப்பட்டுள்ளதாக சபுகஸ்கந்த பொலிஸார் தெரிவித்தனர். (ஐ)

# துப்பாக்கி சூட்டு சந்தேகநபர் கைதானார்!

கொழும்பு, மார்ச் 04

கொழும்பு - பொரளையில் நடத்தப்பட்ட துப்பாக்கிச் சூட்டுச் சம்பவத்துடன் தொடர்புடைய சந்தேக நபர் ஒருவரை பொலிஸார் கைது செய்துள்ளனர்.

வெல்லம்பிட்டி பிரதேசத்தைச் சேர்ந்த 22 வயதுடைய நபரே இவ்வாறு கைது செய்யப்பட்டுள்ளார்.

துப்பாக்கிச் சூட்டுச் சம்பவத்தின் போது சந்தேகநபர் பயன்படுத்திய மோட்டார் சைக்கிளும் பொலிஸாரால் கைப்பற்றப்பட்டதாகத் தெரிவிக்கப்பட்டது. (ஐ)

# நெருக்கடியான நிலையிலும் வங்கிகளுக்கு பெரும் இலாபம்!

கொழும்பு, மார்ச் 04

கடன் மீள் திருத்தத்தின் போது வங்கி துறையை விடுவித்ததால் அவர்களுக்கு ஆசுவாசப்படுத்தக் கூடிய ஒரு வாய்ப்பு ஏற்பட்டிருக்கின்றது. இந்தக் காலப்பகுதியில் வங்கித் துறையினர் மிகப் பெரும் இலாபத்தை உழைத்திருக்கின்றார்கள் என்று கொழும்பு பல்கலைக்கழகத்தின் பொருளியல் துறை பேராசிரியர் கலாநிதி கணேசமூர்த்தி தெரிவித்தார்.

நாட்டின் வங்கித் துறையில் பணியாற்றும் உயர் அதிகாரிகளுடைய தனிப்பட்ட கருத்துகளைப் பார்த்தால் கத்தி முனையில் நடந்து கொண்டிருக்கும் வேலையைத்தான் அவர்கள் தற்போது செய்து கொண்டிருக்கின்றார்கள்.

ஆனாலும்கூட கடன் மீள் திருத்தத்தின் போது வங்கித் துறையை விடுவித்ததன் காரணமாக அவர்களுக்கு ஆசுவாசப்படுத்தக் கூடிய ஒரு வாய்ப்பு ஏற்பட்டிருக்கின்றது. இந்தக் காலப்பகுதியில் வங்கித் துறையினர் மிகப் பெரும் இலாபத்தை உழைத்திருக்கின்றார்கள்.

ஏனென்றால், இந்த வட்டி வீதங்கள் அதிகரிக்கப்பட்ட போது அதிக வட்டிக்கு கடனை வழங்கி அதன் மூலமாக அதிக இலாபத்தை அவர்கள் உழைத்திருக்கின்றார்கள். ஆகவே இந்த நெருக்கடி காரணமாக வங்கித் துறையிலே இருந்த பல்வேறு வங்கிகள் மிகப் பெரிய இலாபத்தை உழைத்திருக்கின்றன. ஆகவே அவை சத்தமில்லாமல் இருப்பதற்கு இந்த இலாபங்களும் ஒரு காரணமாக இருக்கின்றன. அவற்றை அவர்கள் மீள் முதலீடு செய்யவில்லை - என்றார். (ஐ)

# பொதுஜன பெரமுனவின் வேட்பாளர் ஜனாதிபதி தேர்தலில் போட்டியிடுவார்!

**ரோஹித அபேகுணவர்த்தன**



கொழும்பு, மார்ச் 04

நாட்டில் நிலவும் பொருளாதார நெருக்கடியில் இருந்து நாட்டை கட்டியெழுப்பக் கூடிய - அதற்காக அர்ப்பணிப்புடன் செயலாற்றத் தயாராக இருக்கும் வேட்பாளரை சிறீலங்கா பொதுஜன பெரமுன எதிர்வரும் ஜனாதிபதி தேர்தலில் நிறுத்தும் என பாராளுமன்ற உறுப்பினர் ரோஹித அபேகுணவர்த்தன தெரிவித்துள்ளார்.

மேலும், ஐக்கிய மக்கள் சக்தியும், மக்கள் விடுதலை முன்னணியும் ஜனாதிபதித் தேர்தலில் நிறுத்த போவதாக கூறும் நபர்களின் பெயர்களை இன்று நேற்று கூறவில்லை.

சஜித்தும் அநுரவும் 2019 ஆம் ஆண்டு ஜனாதிபதி தேர்தலில் போட்டியிட்டு தோல்வியடைந்தனர். தோல்வியடைந்த அன்றைய தினமே அடுத்த ஜனாதிபதித் தேர்தலில் போட்டியிட போவதாக கூறினர். வேறு யாராவது போட்டிக்கு வந்து விடுவார்களோ என்ற பயம் இவர்களுக்கு இருக்கின்றது.

சரத் பொன்சேகா, ஜனாதிபதித் தேர்தலில் போட்டியிட போவதாகக் கூறினார், சஜித் அவருடன் மோதினார்.

தற்போது பொன்சேகா சஜித்தை விமர்சித்து வருகிறார். இன்னும் சிறிது காலத்தில் அந்த கட்சியில் இருந்து வேறு ஒரு வேட்பாளர் உருவாகி வருவார். இதனால், நாங்கள் அவசரப்பட்டு ஜனாதிபதி வேட்பாளர்களை அதிகரித்துக்கொள்ள தேவையில்லை.

12 வேட்பாளர்களை தேர்தலில் நிறுத்த முடியாது. ஒருவரை நாங்கள் வேட்பாளராக நிறுத்துவோம் - வெற்றி பெறுவோம். நாட்டுக்கு சேவை செய்யக்கூடிய வேட்பாளரை நிறுத்த பொதுஜன பெரமுன தயராகி வருகிறது.

எமது கட்சியின் நிறுவுநர் செவ்வாய்க்கிழமை (நாளை) இலங்கை வருகிறார். அவருடன் நாங்கள் இந்த வாரமே மகிந்த ராஜபக்சவுடன் பேச்சுவார்த்தை நடத்தி ஜனாதிபதி தேர்தலுக்கு தயாராவோம் - என்றார். (ஐ)

இம்யூனோகுளோபுலின் விவகாரம்

# கைது செய்யப்பட்டவர்கள் வெவ்வேறு சிறைகளில்!

கொழும்பு, மார்ச் 04

சர்ச்சைக்குரிய இம்யூனோகுளோபுலின் மருந்துக் கொள்வனவு மோசடி தொடர்பில் விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ள சந்தேக நபர்கள் வெவ்வேறு சிறைச்சாலைகளில் தடுத்து வைக்கப்பட்டுள்ளனர் .

முன்னாள் அமைச்சர் கெஹெலிய ரம்புக்வெல, வெலிக்கடை சிறைச்சாலையின் மருத்துவமனையில் சேர்க்கப்பட்டுள்ளார்.

சிறையில் தடுத்து வைப்பு இன்னும் சில சந்தேக நபர்கள் மகசின் மற்றும் கொழும்பு விளக்கமறியல் சிறைச்சாலை என்பவற்றில் தடுத்து வைக்கப்பட்டுள்ளனர்.

இந்தச் சம்பவம் தொடர்பில் கடைசியாக கைது செய்யப்பட்ட சுகாதார அமைச்சின் மேலதிக செயலாளர் மருத்துவர் சமன் ரத்நாயக்க, மகசின் சிறைக்கு கொண்டு செல்லப்பட்டு, அங்கிருந்து மஹர சிறைச்சாலைக்கு மாற்றப்பட்டுள்ளார்.

மேலும்,சந்தேக நபர்களில் ஒருவர் தற்போது கொழும்பு தேசிய மருத்துவமனையில் சிகிச்சை பெற்று வருகின்றார் என்பது குறிப்பிடத்தக்கது. (ஐ)

# ஜனாதிபதி புலமைப்பரிசிலுக்கு விண்ணப்பம் கோரப்பட்டுள்ளது!

கொழும்பு, மார்ச் 04

தற்போது பொருளாதாரத்தில் பின்தங்கிய ஒரு இலட்சம் பாடசாலை மாணவர்களை இலக்காக கொண்டு "ஜனாதிபதி புலமைப் பரிசில் திட்டம் 2024/25" விண்ணப்பங்களை கோரியுள்ளது .

விண்ணப்பங்களை எதிர்வரும் 20ஆம் திகதிக்குள் அனுப்பி வைக்குமாறு ஜனாதிபதி செயலகம் கோரியுள்ளது.

விண்ணப்பப் படிவங்கள், அறிவுறுத்தல்கள் மற்றும் தொடர்புடைய தகவல்களை தமிழ், சிங்களம் மற்றும் ஆங்கிலம் ஆகிய மொழிகளில் ஜனாதிபதி நிதியத்தின் உத்தியோகபூர்வ முகநூல் பக்கத்திலும் ஹஹஹ.presidentsfund.gov.lk என்ற இணையத்தளத்திலும் பெற்றுக்கொள்ள முடியும்.

பூர்த்தி செய்யப்பட்ட விண்ணப்பங்களை அந்தந்தப் பாடசாலை அதிபர்கள் ஊடாக எதிர்வரும் 20ஆம் திகதிக்கு முன்னர் சமர்ப்பிக்க வேண்டும் என அறிவிக்கப்பட்டுள்ளது. (ஐ)

# காலி சிறைச்சாலையில் மீண்டும் மூளைக்காய்ச்சல்!

கொழும்பு, மார்ச் 04

காலி சிறைச்சாலையில் மூளைக் காய்ச்சலால் பாதிக்கப்பட்ட நோயாளி ஒருவர் மீண்டும் அடையாளம் காணப்பட்டுள்ளார்.

அந்த நோயாளி தற்போது கராப்பிட்ட போதனா மருத்துவமனையில் சிகிச்சை பெற்று வருகிறார் என்று சிறைச்சாலை சுகாதார சேவைகள் பணிப்பாளர் வைத்தியர் ஹேமந்த ரணசிங்க தெரிவித்துள்ளார்.

கடந்த 19ஆம் திகதி சிறையில் அடைக்கப்பட்டிருந்த கைதி ஒருவருக்கு சுகயீனம் ஏற்பட்டது. அவருக்கு மூளைக் காய்ச்சல் இருப்பது உறுதி செய்யப்பட்டது. அங்கு வேறு எவருக்கும், மூளைக் காய்ச்சல் உறுதிப்படுத்தப்படவில்லை.

இதேநேரம், இந்த வருடத்தில் காலி சிறையில் மூளைக் காய்ச்சலால் பலர் பாதிக்கப்பட்டனர். கைதிகள் இருவர் உயிரிழந்தனர் என்பது குறிப்பிடத்தக்கது.

இந்த நோயைக் கட்டுப்படுத்த சிறைச்சாலை சுகாதார பிரிவால் விசேட வேலைத்திட்டமொன்று நடைமுறைப்படுத்தப்பட்டுள்ளதாக சிறைச்சாலை சுகாதார சேவைகள் தெரிவித்தார். (ஐ)

# போதையில் வாகனம் செலுத்தினால் அனுமதி பத்திரத்தை இரத்து செய்க!

## நீதி அமைச்சர் விஜயதாஸ பரிந்துரை

**கொழும்பு, மார்ச் 04**
**மதுபோதையில் வாகனம் ஓட்டி விபத்து ஏற்படுத்துபவர்களுக்கு சாரதி அனுமதிப் பத்திரத்தை ஒரு வருடத்துக்கு தடை செய்வது குறித்து ஆராயப்பட்டு வருகின்றது.**
**வீதி விபத்துகளை குறைப்பதற்கு பாராளுமன்றத் தெரிவுக் குழுவை நியமிக்குமாறு கோரி சபாநாயகர் மகிந்த யாப்பா அபேவர்த்தனவுக்கு எழுதிய கடிதத்திலேயே நீதி அமைச்சர் விஜயதாஸ ராஜபக்ஷ தெரிவித்தார்.**



விபத்துகள் காரணமாக, மருத்துவமனை அமைப்பும் கூடுதலான செலவுகளைச் சுமக்க வேண்டியுள்ளது, ஒட்டுமொத்த பொருளாதாரத்தையும் பாதிக்கிறது. விபத்துகளைத் தொடர்ந்து ஊனமுற்ற மக்கள் தங்கள் வருமானத்தை இழப்பதும் பொருளாதாரத்தை பாதிக்கிறது.
கடந்த ஆண்டு 2,200 விபத்துகள் மற்றும் 2,310 விபத்து தொடர்பான இறப்புகள் நிகழ்ந்தன. 6,1995 பேர் காயங்களுக்கு ஆளாகியுள்ளனர் இதில், 9,725 பேர் சாதாரண காயங்களுக்கு ஆளாகியுள்ளனர்.
வீதி விபத்துகளால் பெரும்பாலும் பாதசாரிகள் மற்றும் மோட்டார் சைக்கிள் ஓட்டுபவர்களே அதிகளவில் உயிரிழக்கின்றனர். எனவே வழமைக்கு மாறாக அதிகரித்து வரும் விபத்துகளை குறைப்பதற்கு 11 பேர் கொண்ட விசேட தெரிவுக்குழுவை நியமிக்குமாறு கோரிக்கை விடுக்கிறேன்.
நான்கு மாதங்களுக்குள் தெரிவுக்குழுவின் அறிக்கையை சமர்ப்பிக்குமாறு சபாநாயகரிடம் கோரிக்கை விடுப்பதாகவும் அமைச்சர் கூறினார்.
போக்குவரத்து விபத்துக்களுக்கான காரணங்கள் மற்றும் திருத்தப்பட வேண்டிய சட்டப் பகுதிகள் ஆகியவற்றைக் கண்டறியும் பணியை தெரிவுக்குழு மேற்கொள்ளும். புதிய போக்குவரத்து சட்டங்களை அமுல்படுத்துமாறும், அபராதத் தொகையை அதிகரிக்குமாறும் கோருகிறேன். போக்குவரத்து விதிமீறல்களுக்கு ஏற்ப சாரதி அனுமதிப்பத்திரத்தை தற்காலிகமாகவோ முழுமையாகவோ இரத்துசெய்ய வழிவகுக்கும் தகுதி முறையை நடைமுறைப்படுத்த வேண்டும் - என்றும் அவர் கூறினார். (ஐ)

# பொலிஸ் சார்ஜன்ட்டின் வீட்டின் முன்பாக துப்பாக்கி பிரயோகம்!

கொழும்பு, மார்ச் 04
சேவையிலிருந்து இடைநிறுத்தப்பட்ட பொலிஸ் சார்ஜன்ட் ஒருவரின் வீட்டின் முன்பாக ஆகாயத்தை நோக்கி துப்பாக்கிப் பிரயோகம் செய்யப்பட்டுள்ளது.
காலி - நாகொடை - வலகும்புர பிரதேசத்திலேயே இந்தச் சம்பவம் இடம்பெற்றுள்ளது.
மோட்டார் சைக்கிளில் வந்த இனந்தெரியாத இருவர், வீட்டின் இரண்டு ஜன்னல் கண்ணாடிகள் மீது கற்களை வீசி சேதப்படுத்தியதுடன் ஆகாயத்தை நோக்கியும் துப்பாக்கிப் பிரயோகம் செய்தனர்.
அத்துடன், அவர்கள் சார்ஜன்டின் கணினி, கைபேசியை கைப்பற்றி சென்றுள்ளனர் என்றும் பொலிஸார் தெரிவித்தனர்.

# வாங்கிய கடனுக்கு வட்டியாக மட்டும் 2 இலட்சம் கோடி ரூபாய் தேவை!

கொழும்பு, மார்ச் 04
நாடு வாங்கிய கடனுக்கான வட்டியாக இரண்டு இலட்சம் கோடி ரூபாய்க்கு மேல் செலுத்த வேண்டியுள்ளது என போக்குவரத்து, நெடுஞ்சாலைகள் மற்றும் வெகுஜன ஊடக அமைச்சர் பந்துல குணவர்தன தெரிவித்துள்ளார்.
நிகழ்வு ஒன்றில் பங்கேற்ற அமைச்சர்,
அரசாங்கத்தை பராமரிப்ப தற்கும் போதிய வருமானம் தற்போது இல்லை. கடந்த ஆண்டு முழுவதும் திறைசேரிக்கு மூன்று ஆயிரம் கோடி ரூபாய் மட்டுமே கிடைத்தது. அரசு ஊழியர்களுக்கு சம்பளம் வழங்க 2 ஆயிரம் கோடி ரூபாய்க்கு மேல் செலவிடப்பட்டது.
வெளிநாடுகளடமிருந்து பெற்ற கடன்களை உறுதியளித்தபடி செலுத்தாவிட்டால் இலங்கையை முன்னோக்கி கொண்டு செல்லமுடியாது. நாடு வாங்கிய கடனுக்கான வட்டியாக இரண்டு இலட்சம் கோடி ரூபாய்க்கு மேல் செலுத்த வேண்டியுள்ளது. அதற்கேற்ப எஞ்சிய செலவுகளை கடனாகப் பெற்றுக் கொண்டதாகவும் அவர் தெரிவித்தார். (ஐ)

# மூன்றரை இலட்சம் தொன் நெல் அறுவடை காலத்தில் இழப்பு!

## விவசாய அமைச்சு கூறுகிறது

කෘෂිකර්ම දෙපාර්තමේන්තුව
விவசாயத் திணைக்களம்
Department of Agriculture

கொழும்பு, மார்ச் 04
பெரும்போக அறுவடையின்போது 3 இலட்சத்து 50ஆயிரம் தொன்னுக்கும் அதிகமான நெல் இழக்கப்பட்டதாக விவசாய அமைச்சு தெரிவித்துள்ளது. இது பெரும்போக காலத்தில் பயிரிடப்பட்டதில் 10 - 15 சதவீதமாகும்.
நெல் பயிர் நீண்டகாலமாக பயிரிடப்பட்டிருந்தாலும் அது எப்போது விளையும் என்ற புரிதல் இல்லாமையே இந்த இழப்புக்குப் பிரதான காரணமாகும். அத்துடன், பயிர்ச் சேதங்களால் ஏற்பட்டுள்ள இழப்பு பல நூறு கோடி ரூபாயாகும் என்றும் விவசாய அமைச்சு தெரிவித்துள்ளது. (ஐ)

# மீண்டும் கோப்பி செய்கை ஆர்வம் காட்டுகிறது அரசு!

கொழும்பு, மார்ச் 04
மீண்டும் கோப்பி பயிருக்கு முன்னுரிமை வழங்குவதற்கு அரசாங்கம் அழைப்பு விடுத்துள்ளது. "சிலோன் கோப்பி" மூலம் ஏற்றுமதி சந்தையைக் கைப்பற்றவும் அரசு திட்டமிட்டுள்ளது.
இதற்காக, மலையகத்தில் வெற்று நிலங்களை பயிர்ச் செய்கை நோக்கங்களுக்காக பயன்படுத்துவது குறித்து கவனம் செலுத்தப்படுகின்றது.
கோப்பி பயிரிடுவதற்கு ஏற்ற நிலப்பரப்பு மற்றும் தட்பவெப்ப நிலைகளைக் கொண்டது இலங்கை. காலனித்துவ காலத்தில் தேயிலை பயிர்ச்செய்கைக்கு செல்வதற்கு முன்னர் கோப்பியே தேர்ந்தெடுக்கப்பட்டது.
தற்போது, கோப்பிக்கான உலகளாவிய தேவை அதிகரித்து வருவதை கருத்தில்கொண்டு, இலங்கை கோப்பியை உற்பத்தி செய்து உலகுக்கு சந்தைப்படுத்துவதில் கவனம் செலுத்தவுள்ளது.
இன்று கோப்பி பயிர்ச்செய்கையில் முக்கிய பங்காற்றுபவர்கள் மூன்று வருடங்களாக பயிர்ச் செய்கையில் இணைந்துள்ள போதிலும், வருடாந்த உற்பத்தி திறன் சுமார் 70 மெற்றிக் தொன்களுக்கு மட்டுப்படுத்தப்பட்டுள்ளது என்று லங்கா கோப்பி சங்கத்தின் தலைவர் குஷான் சமரரத்ன தெரிவித்துள்ளார்.
கோப்பி பயிரிடுவது குறித்த விழிப்புணர்வை ஏற்படுத்தவும், விவசாயிகளுக்கு கற்பிக்கவும் கோப்பி பயிர்ச்செய்கை நிபுணர்களைக் கொண்டு வர வேண்டும். மேலும், நீண்ட கால அடிப்படையில், ஏற்றுமதி சந்தையில் சிறிய அளவுகளுக்கு அதிக வருமானத்தை ஈட்டக்கூடிய பிரீமியம் தரமான முக்கிய சந்தையை வழங்குவதில் இலங்கை கவனம் செலுத்த வேண்டும் - என்றும் அவர் கூறினார். (ஐ)

# மசாஜ் நிலையம் சுற்றிவளைப்பு 8 பெண்கள் உட்பட 10 பேர் கைது!

கொழும்பு, மார்ச் 04
ஆயுள்வேத மசாஜ் நிலையம் என்ற போர்வையில் விபசார நிலையம் சுற்றிவளைக்கப்பட்டு இரு முகாமையாளர்கள் உட்பட 8 பெண்கள் கைது செய்யப்பட்டனர் என்று பொலிஸார் தெரிவித்தனர்.
கைதானவர்கள், அம்பாறை, இங்கிரிய, இரத்தினபுரி, தமன, நிவித்திகல மற்றும் நாவலப்பிட்டி பிரதேசங்களை சேர்ந்த 25 - 50 வயதுக்கு இடைப்பட்ட பெண்களாவர்.
பொலிஸாருக்கு கிடைத்த இரகசிய தகவலின் அடிப்படையிலேயே இந்தக் கைதுகள் இடம்பெற்றன என்று தெரிவிக்கப்பட்டது. (ஐ)

# 5 மாகாணங்களில் கடும் வெப்பநிலை!

கொழும்பு, மார்ச் 04
மன்னார் மாவட்டத்திலும் நாட்டின் ஐந்து மாகாணங்களிலும் கடும் வெப்பமான கால நிலை நிலவுகிறது.
இந்த வெப்பமான காலநிலை தொடர்பில் மக்கள் அவதானத்துடன் செயல்பட வேண்டும் என்று வளிமண்டலவியல் திணைக்களம் தெரிவித்துள்ளது.
இந்த நிலைமை வடமேற்கு, மேற்கு, சப்ரகமுவ, தெற்கு மற்றும் கிழக்கு மாகாணங்களை பாதித்துள்ளது என்றும் வளிமண்டலவியல் திணைக்களம் தெரிவித்துள்ளது. (ஐ)

# 180 நாட்கள் பணியாற்றியோரை நிரந்தரமாக்க அரசு தீர்மானம்!

கொழும்பு, மார்ச் 04
உள்ளூராட்சி மன்றங்களில் 180 நாட்களுக்கு மேல் தொடர்ச்சியாக பணியாற்றிய தற்காலிக, ஒப்பந்த மற்றும் சலுகை அடிப்படையில் ஆட்சேர்ப்பு செய்யப்பட்ட ஊழியர்களை நிரந்தரமாக்க அரசாங்கம் தீர்மானித்துள்ளது.
அதற்கான அனுமதியை பெற்றுக்கொள்வதற்காக பொது நிர்வாக, உள்நாட்டலுவல்கள், மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சு அமைச்சரவையில் மனு ஒன்றை வழங்கியுள்ளது.
கடந்த ஆண்டு (2023) ஒகஸ்ட் 29 ஆம் திகதி 8,435 பேர் 180 நாட்களுக்கும் மேலாக தொடர்ச்சியாக வேலை செய்து வருகின்றனர்.
ஜனவரி 18 அன்று மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி இராஜாங்க அமைச்சர், நிதி, பொருளாதார ஸ்திரப்படுத்தல் மற்றும் தேசிய கொள்கைகள் ஆகியவற்றின் இராஜாங்க அமைச்சர் மற்றும் அதன் செயலாளர் ஆகியோருக்கிடையில் அந்த ஊழியர்களுக்கு தொழில் பாதுகாப்பை வழங்குவது தொடர்பில் கலந்துரையாடல் ஒன்று இடம்பெற்றது.
இதற்கமைய, உள்ளூராட்சி மன்றங்களில் வீதிப் பராமரிப்பு, குப்பை அகற்றல், நூலகச் சேவை, அலுவலக உதவிச் செயல்பாடுகள் போன்றவற்றில் ஈடுபட்டுள்ளவர்கள் சேவைகளை தொடர்ந்தும் பேணுவது அவசியமானது என்பதால் அவர்களுக்கு நிரந்தர சேவை வழங்குவது நியாயமானது என அங்கு தெரிவிக்கப்பட்டது. (ஐ)

# திருமலை - தென்னிந்தியா இடையே உற்பத்திகளைப் பரிமாறத் திட்டம்!

## ஜனாதிபதி ரணில் தெரிவிப்பு



**திருகோணமலை, மார்ச் 04**
**திருகோணமலை துறைமுகத்தை கிழக்கின் பிரதான துறைமுகமாக அபிவிருத்தி செய்து அதன் ஊடாக தென்னிந்தியாவின் உற்பத்திகளை பரிமாறிக் கொள்ள எதிர்பார்க்கப்படுகிறது - என்று ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தெரிவித்துள்ளார்.**

நேற்று முன்தினம் திருகோணமலைக்கு சென்ற ஜனாதிபதி தம்லகமுவ பிரதேசச் செயலாளர் பிரிவில் நெல் அறுவடையை பார்வையிட்டார். இதன் பின்னரே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

இந்தியாவுடன் இணைந்து திருகோணமலையை அபிவிருத்தி செய்வதற்கான விசேட வேலைத்திட்டம் எம்மிடம் உள்ளது. திருகோணமலை எண்ணெய் தாங்கி வளாகத்துக்கு மேலதிகமாக, இந்தியாவில் இருந்து குழாய் மூலம் எரிபொருளை விநியோகிக்கும் திட்டமும் உள்ளது. சுற்றுலா மட்டுமின்றி, வேலைவாய்ப்புகளை விரிவுபடுத்தி முதலீட்டு வலயங்களை உருவாக்கவும் திட்டமிடப்பட்டுள்ளது.

திருகோணமலை துறைமுகத்தை கிழக்கின் பிரதான துறைமுகமாக அபிவிருத்தி செய்து அதன் ஊடாக தென்னிந்தியாவின் உற்பத்திகளை பரிமாறிக் கொள்ள எதிர்பார்க்கப்படுகிறது. இந்தத் திட்டங்கள் திருகோணமலை மாவட்டத்தில் முழுமையான அபிவிருத்தியை ஏற்படுத்தும்.

மேலும், திருகோணமலை மாவட்டத்தில் விவசாய தொழில், கால்நடை வளர்ப்பு மற்றும் மீன்பிடி கைத்தொழில் போன்றவற்றை அபிவிருத்தி செய்வதற்கும் எதிர்பார்க்கிறோம். இப்பகுதியில் விவசாயத் தொழிலை எவ்வாறு மேம்படுத்துவது என்பது குறித்த யோசனையைப் பெறவே இன்று இங்கு வந்தோம். இது தொடர்பாக நீங்கள் எதிர்கொள்ளும் பிரச்னைகள் பற்றி அறிந்து கொண்டேன். இது தொடர்பான அறிக்கைகளை வழங்குமாறு ஆளுநருக்கும் பிரதேச சபை உறுப்பினர்களுக்கும் அறிவுறுத்தியுள்ளேன். இந்த அபிவிருத்தித் திட்டப் பணிகள் 2025 ஆம் ஆண்டில் ஆரம்பிக்க எதிர்பார்க்கிறோம் - என்றார். (ஐ)

# அஞ்சல் திணைக்களத்தின் வியாபார மேம்பாட்டு திட்டம்!




*கல்முனை, மார்ச் 04*
அஞ்சல் திணைக்களத்தின் புதிய நடைமுறையின்படி வியாபாரத்தை மேம்படுத்தும் நிகழ்ச்சித் திட்டம் கல்முனை நகரை மையப்படுத்தி கல்முனை பிரதம அஞ்சல் அதிபர் யூ. எல். எம். பைஸர் தலைமையில் நேற்று நடைபெற்றது.

இந்த நிகழ்ச்சி திட்டம் அஞ்சல் மா அதிபரின் எண்ணக்கருவின் அடிப்படையில் கிழக்கு மாகாண அஞ்சல் மா அதிபதி எம். எச். எம். அஸ்லம் வழிகாட்டலில் அக்கரைப்பற்று அம்பாறை பிராந்திய அஞ்சல் அத்தியட்சகர் கே.பி.எஸ். பியந்தவின் பங்கேற்புடன் கல்முனை அஞ்சல் அலுவலகத்தில் இருந்து ஆரம்பமாகி தரவைப் பிள்ளையார் கோவில் அருகில் சென்று மீண்டும் கல்முனை பிரதம அஞ்சகத்தை பேரணி வந்தடைந்தது.

இதன்போது, அஞ்சலகத்தின் சேவைகள் தொடர்பாக விழிப்பூட்டல்களை துண்டுப் பிரசுரம் மூலம் நகரப்பகுதி வர்த்தக நிலையங்கள் பொது மக்கள் இடையே விரிவாக விளக்கமளிக்கப்பட்டது. (ஐ)

# இயந்திரம் மூலமான நெல் நடுகை; மட்டக்களப்பில் செய்முறை பயிற்சி



*மட்டக்களப்பு, மார்ச் 04*
மட்டக்களப்பு மாவட்டத்தில் நெல் பயிர் செய்கையை நவீனப்படுத்த தொழில்நுட்ப இயந்திரம் உதவியுடன் உற்பத்தியை விரிவுபடுத்தல் நடவடிக்கையின் வீரியமான நெல் நாற்று உற்பத்தி செய்வதற்கான நாற்று மேடை தயாரித்தல் மற்றும் சிறந்த விதை நெல் உற்பத்தி செய்தல் தொடர்பான செய்முறை பயிற்சி நிகழ்வு நேற்று மட்டக்களப்பு கரடியனாறு விவசாய விரிவாக்கம் பிரிவின் கோப்பாவெளி போதனாசிரியர் பிரிவில் நடைபெற்றது.

இயந்திரம் மூலம் நெல் நாற்றுக்களை நடுதலுக்கான வீரியமான விதை நெல் மூலம் நாற்றுக்களை உற்பத்தி செய்தல், நாற்று மேடை அமைத்தல் நிகழ்வானது மட்டக்களப்பு கரடியனாறு விவசாய விரிவாக்க பிரிவின் கோப்பாவெளி போதனாசிரியர் பிரிவு முன்னோடி விவசாயியான ரோசான் விவசாய நிலத்தில் நிலம் பண்படுத்தப்பட்டு நிகழ்வும் முன்னெடுக்கப்பட்டது.

மாவட்ட வர்த்தக கைத்தொழில் விவசாய சம்மேளனம், மாவட்ட விவசாய திணைக்களம், கரடியனாறு விவசாய ஆராய்ச்சி பிரிவு மற்றும் கிளிநொச்சி இந்திரா குழுமம் இணைந்த ஏற்பாட்டில் மாவட்ட விவசாய விரிவாக்க பிரிவு.

விவசாய பணிப்பாளர் பரமேஸ்வரன் வழிநடத்தலில் இடம்பெற்ற நிகழ்வில் மாவட்ட விவசாய உதவி பணிப்பாளர் எஸ். சித்திரவேல், யாழ். பல்கலைக்கழக விவசாய விரிவுரையாளர் ரஜிதன், விவசாய சம்மேளன துறை தலைவர் ரமேஷ், பிராந்திய விவசாய ஆராய்ச்சி நிலைய தொழினுட்ப உதவியாளர் பிரதீபன், கரடியனாறு கமநல சேவை நிலைய தலைவர் குணா நிதி மற்றும் முன்னோடி விவசாயிகள், விவசாய திணைக்கள உத்தியோகத்தர்கள் கலந்துகொண்டனர். (ஐ)

# கிழக்கு மாகாணத்தில் முஸ்லிம் நிர்வாகிகள்!

## விரைவில் நியமிக்கப்படுவர் என்கிறார் முஷாரப் எம். பி!

*அக்கரைப்பற்று, மார்ச் 04*
கிழக்கு மாகாண அமைச்சுகளின் செயலாளர்களாக முஸ்லிம் நிர்வாக அதிகாரிகள் நியமிக்கப்படுவதற்கான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருகின்றன என்று திகாமடுல்லை (அம்பாறை) மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் சட்டத்தரணி எஸ். எம். எம். முஷாரப் தெரிவித்தார்.

நேற்றுமுன்தினம் இரவு நிகழ்வு ஒன்றின் பின்னர் செய்தியாளர்களை சந்தித்தபோதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

கிழக்கு மாகாணத்தில் தீர்மானம் மேற்கொள்ளும் எந்தப் பதவி நிலையிலும் எவரும் இல்லை - பல்வேறு முக்கிய பதவி நிலைகளுக்கு முஸ்லிம் நிர்வாகிகள் உள்ளவாங்கப்படவில்லை என்பது தொடர்பில் கேள்வி எழுப்பினர்.

இதற்கு பதிலளித்த முஷாரப் எம். பி.,

கிழக்கு மாகாண அமைச்சுகளின் செயலாளர்களாகவும் திணைக்களங்களின் தலைவர்களாகவும் முஸ்லிம் நிர்வாக அதிகாரிகள் பலரை நியமிக்க நடவடிக்கை எடுத்து வருகிறோம். விரைவில் நியமனங்கள்



நடக்கும் என்ற நம்பிக்கை உள்ளது. கிழக்கு மாகாண அமைச்சுகளின் செயலாளர்களாக முஸ்லிம் நிர்வாக அதிகாரிகள் நியமிக்கப்படுவதற்கான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருகின்றது.

கிழக்கு மாகாணத்துக்கான புதிய ஆளுநர் நியமிக்கபட்டபோது இனவாத கருத்துடன் பலரும் பேச வெளிக்கிட்ட நிலையில், நாமும் அந்தக் கருத்துகளுடன் செல்லவில்லை. மாறாக கிழக்கைக் கட்டியெழுப்பக்கூடிய துடிப்புள்ள வேகமான செயல்திறன் கொண்ட ஆளுநரே நமக்குத் தேவை என்கின்ற நிலைப்பாட்டுடன் நாம் இருந்தோம்.

அந்த வகையில் திறமையான ஆளுநர் நமக்குக் கிடைத்திருக்கின்றார். இரவு பகலாக அர்ப்பணிப்புடன் செயல்படுவதைக் காண்கின்றோம். கிழக்கு மாகாண அமைச்சுகளின் செயலாளர்களாக முஸ்லிம் நிர்வாக அதிகாரிகள் மிக விரைவாக நியமிக்கப்படுவார்கள் - என்றார். (ஐ)

ஈழநாடு



# காஸாவுக்கு விமானம் மூலம் உணவு வீசியது அமெரிக்கா!



காஸா, மார்ச் 04

**மூன்று விமானங்கள் மூலம் 30 ஆயிரத்துக்கும் அதிகமான உணவுகளை பராசூட் மூலம் வீசியது அமெரிக்கா. இது காஸாவுக்கான அந்த நாட்டின் முதல் மனிதாபிமான உதவியாகும். ஜோர்தானின் விமானப் படையுடன் இணைந்து அமெரிக்கா இந்த நடவடிக்கையை மேற்கொண்டுள்ளது.**

உணவுடன் வந்த லொறிகளில் இருந்து உணவுகளை பெறுவதற்காக தென்மேற்கு காஸாவில் திரண்டவர்கள் மீது இஸ்ரேல் நடத்திய தாக்குதலில் 112 பேர் உயிரிழந்தனர். 760இற்கும் மேற்பட்டோர் காயமடைந்தனர். இதனிடையே, இஸ்ரேல் - ஹமாஸ் 6 வார போர் நிறுத்தம் நடைமுறையில் இருந்த நிலையில் இந்தத் தாக்குதல் நடத்தப்பட்டது.

இந்தநிலையில், சி -130 விமானங்கள் மூலம் 38 ஆயிரத்துக்கும் மேற்பட்ட உணவுப் பொதிகளை வீசியது அமெரிக்கா.

எனினும், ரொய்ட்டர்ஸின் செய்தியின்படி, இந்த முறைமை மிக மோசமானது என்று காஸா மக்கள் தெரிவித்துள்ளனர். 10 ஆயிரம் பேருக்கே இந்த உணவுப் பொதிகள் போதுமானவை என்று அவர்கள் கூறினர்.

இதனிடையே, 3 இலட்சம் பேர் வசிக்கும் காஸாவில் மிகக் குறைந்தளவு தண்ணீரும் உணவுமே உள்ளது. அங்கு பஞ்சம் அதிகரித்து வருவதாக ஐ. நா. உணவுத் திட்டம் எச்சரித்துள்ளது.

கடந்த ஆண்டு ஒக்ரோபர் 7ஆம் திகதி இஸ்ரேலுக்குள் நுழைந்த ஹமாஸ் 1200 பேரை கொன்றதுடன், 250 பேரை பணயக் கைதிகளாகப் பிடித்துச் சென்றது.

இதைத் தொடர்ந்து, ஹமாஸ் அமைப்பினரை அழிக்கும் நோக்கில் காஸா மீது இஸ்ரேல் படையெடுத்தது. இதில், 21 ஆயிரம் சிறுவர்கள் மற்றும் பெண்கள் உட்பட 30 ஆயிரத்துக்கும் மேற்பட்ட பொதுமக்கள் கொல்லப்பட்டனர். 7 ஆயிரத்துக்கும் அதிகமானோர் காணாமல் ஆக்கப்பட்டுள்ளனர். 70 ஆயிரத்து 450 பேர் காயமடைந்துள்ளனர் என்று காஸா சுகாதார அமைச்சு தெரிவித்துள்ளது என்பது குறிப்பிடத்தக்கது. (ஐ)

# உக்ரைனுக்கு தரைப் படைகள்: நன்கு சிந்தித்தே தெரிவித்தேன்!

## பிரான்ஸ் ஜனாதிபதி உறுதி



பாரிஸ், மார்ச் 04

உக்ரைனுக்கு படைகளை அனுப்பும் தனது கருத்து நன்கு சிந்தித்தே தெரிவிக்கப்பட்டது என்று பிரான்ஸ் ஜனாதிபதி இமானுவல் மக்ரோன் உறுதியாக தெரிவித்துள்ளார்.

உக்ரைன் - ரஷ்யா போர் 2022 பெப்ரவரி 24 அன்று தொடங்கியது. இரு வருடங்கள் கடந்தும் போர் நீடிக்கிறது.

இந்நிலையில், சர்வதேச மாநாடு ஒன்றில் பங்கேற்ற பிரான்ஸ் ஜனாதிபதி இமானுவல் மக்ரோன் உக்ரைனுக்காக தரைப் படைகளை அனுப்புவதில் ஒருமித்த கருத்து எட்டப்படவில்லை என்பது உண்மைதான். ஆனால், படைகளை அனுப்பும் சாத்தியக்கூறு இல்லவே இல்லை என கூற முடியாது" - என்று கூறியிருந்தார்.

எனினும், நேட்டோ நாடுகள் படை அனுப்பும் முடிவை இங்கிலாந்து, அமெரிக்கா, ஜேர்மனி நாடுகள் நிராகரித்துவிட்டன. ஆனால், எஸ்தோனியா, லிதுவேனியா ஆகிய நாடுகள் நிராகரிக்கவில்லை.

இந்நிலையில், பிரான்ஸில் நடைபெறவுள்ள ஒலிம்பிக் போட்டி ஏற்பாடுகளை காண ஜனாதிபதி மக்ரோன் அங்கு சென்றார்.

அப்போது, உக்ரைனுக்கு படைகளை அனுப்பும் அவரின் கருத்து தொடர்பில் கேட்கப்பட்டது. அதற்கு பதிலளித்த அவர், " உக்ரைன் ஆக்கிரமிப்பு ஒரு முக்கியமான சர்வதேச பிரச்னை. உக்ரைன் மீதான ரஷ்யாவின் தாக்குதல் குறித்த எனது கருத்துகள் சிந்தித்து கூறப்பட்டவை. நான் கூறிய ஒவ்வொரு வார்த்தையும் சரி பார்க்கப்பட்டு, ஆழமாக சிந்தித்து கூறப்பட்டவை -என்றார். எனினும், தனது நிலைப்பாடு குறித்து மேலதிக கருத்துகளை வெளியிட அவர் மறுத்துவிட்டார்.

இதனிடையே, நேட்டோ நாடுகளின் படைகள் உக்ரைனில் இறங்கினால், உலகம் ஓர் அணு ஆயுத போரை காண வேண்டி வரும் என்று ரஷ்ய ஜனாதிபதி விளாடிமிர் புடின் எச்சரித்திருந்தமை குறிப்பிடத்தக்கது. (ஐ)

# மும்பை தாக்குதல் சூத்திரதாரி பாகிஸ்தானில் காலமானார்!



புதுடில்லி, மார்ச் 04

கடந்த 2008ஆம் ஆண்டு நடந்த மும்பை தீவிரவாத தாக்குதலின் முக்கிய சூத்திரதாரிகளில் ஒருவராக அறிவிக்கப்பட்ட ஆசம் சீமா (வயது 70) பாகிஸ்தானில் மரணமானார்.

பாகிஸ்தானை சேர்ந்த லஷ்கர்-இ-தொய்பா தீவிரவாதிகள் 10 பேர் கடந்த 2008 நவம்பர் 26ஆம் திகதி மும்பையில் மக்கள் நடமாட்டம் மிகுந்த இடங்களில் நடத்திய தாக்குதல் உலகையே உலுக்கியது. இந்தத் தாக்குதலில் இந்திய படையினர் உட்பட 166 பேர் உயிரிழந்தனர். இந்த தாக்குதல் தவிர, 2006 மும்பையில் குண்டு வெடிப்பு உள்ளிட்ட பல்வேறு தாக்குதல் சம்பவங்களில் முக்கிய சூத்திரதாரியாக அறியப்பட்டவர் ஆசம் சீமா.

லஷ்கர்-இ-தொய்பா அமைப்பின் புலனாய்வு பிரிவு தலைவரான ஆசம் சீமா (70), பாகிஸ்தானின் பைசலாபாத் நகரில் மாரடைப்பால் மரணமானார் என்று தகவல் வெளியானது.

சீமாவை, லஷ்கர் அமைப்பின் முக்கிய தலைவர் எனவும் அவருக்கு ஒசாமா பின்லேடனின் அல்-ஹைடா அமைப்புடன் நெருங்கிய தொடர்பு இருந்ததாகவும் அமெரிக்கா எச்சரித்திருந்தது. (ஐ)

# பிரதமர் நரேந்திர மோடி வாரணாசியில் போட்டி!

## வேட்பாளர்களை அறிவித்தது பா. ஐ. க.

புதுடில்லி, மார்ச் 04

இந்தியப் பிரதமர் நரேந்திர மோடி உத்தரப் பிரதேசம் வாரணாசியில் மீண்டும் போட்டியிடவுள்ளார்.

இந்தியாவில் பாராளுமன்றத் தேர்தல் திகதி இன்னும் அறிவிக்கப்படவில்லை. எனினும், சில வாரங்களில் தேர்தல் அறிவிக்கப்படும்.

இந்த நிலையில், ஆளும் கட்சியான பாரதிய ஜனதா கட்சி தேர்தலில் போட்டியிடும் வேட்பாளர்களின் பட்டியலை வெளியிட்டுள்ளது. முதல் கட்டமா 195 வேட்பாளர்களும் அவர்கள் போட்டியிடும் தொகுதிகளும் வெளியிடப்பட்டுள்ளன. இந்தப் பட்டியலில் பிரதமர் நரேந்திர மோடி, அமித் ஷா உள்ளிட்டோர் இடம்பெற்றுள்ளனர்.

இதன்படி, பிரதமர் நரேந்திர மோடி மீண்டும் வாரணாசி தொகுதியில் போட்டியிடவுள்ளார். இதேபோன்று, உள்துறை அமைச்சர் அமித்ஷா - காந்தி நகர், மத்திய அமைச்சர் ராஜ்நாத் சிங் - லக்னோ, ஹேமமாலினி - உத்தரப் பிரதேசத்தின் மதுரா தொகுதியில் போட்டியிடவுள்ளனர். (ஐ)

# ஹூதிகளால் தாக்கப்பட்ட பிரிட்டன் கப்பல் மூழ்கியது

* அமோனியா மூழ்குவதால் பெரும் சுற்றுச்சூழல் அழிவு
* கப்பல் பணியாளர்கள் பாதுகாப்பாக மீட்பு

டுபாய், மார்ச் 04

செங்கடலில் ஹூதி கிளர்ச்சியாளர்களின் தாக்குதலுக்கு இலக்காகி பிரிட்டன் நாட்டின் சரக்குக் கப்பல் ஒன்று மூழ்கியுள்ளது.

இங்கிலாந்தில் பதிவு செய்யப்பட்ட ரூபிமார் என்ற அந்தக் கப்பல் லெபனான் நிறுவனம் ஒன்றால் இயக்கப்பட்டு வந்தது. அது ஐக்கிய அரபு அமீரகத்தில் இருந்து அமோனியம் உர வகைகளை ஏற்றிக் கொண்டு பல்கேரியா நாட்டின் வர்னா துறைமுக நகரத்துக்குச் சென்றுகொண்டிருந்த வழியில் கடந்த பெப்ரவரி 19 ஆம் திகதி தாக்குதலுக்கு இலக்காகியிருந்தது.



செங்கடலில் ஏடன் வளைகுடாவுக்கு அருகே கப்பல் சென்று கொண்டிருந்த சமயத்திலேயே யேமனின் ஹூதி கிளர்ச்சியாளர்கள் அதனைத் தாக்கினர். இரண்டு ஏவுகணைகள் கப்பலைத் தாக்கின என்று கூறப்படுகிறது.

தாக்கப்பட்ட கப்பலில் இருந்த 24 பணியாளர்களும் பாதுகாப்பாக வெளியேற்றப்பட்டிருந்தனர்.

கப்பலில் உள்ள அமோனியம் கடலில் கலப்பதால் அப்பகுதியில் கடல்வாழ் உயிரினங்களுக்கும் சூழலுக்கும் பேரழிவு ஏற்படும் என்று சுற்றுச் சூழல் நிபுணர்கள் எச்சரித்துள்ளனர்.

செங்கடல் ஊடாகப் பயணிக்கின்ற வழியில் கடந்த ஓரிரு மாதகாலப்பகுதியில் தாக்கப்பட்ட முப்பதுக்கும் மேற்பட்ட கப்பல்களில் இதுவும் ஒன்றாகும்.

காஸாமீதான தாக்குதலை நிறுத்தாத வரை செங்கடலில் தமது தாக்குதல் நிற்காது என்று ஹூதிகள் அறிவித்துள்ளனர். ஹூதிகளின் நிலைகள் மீது அமெரிக்கா வான்வழி தாக்குதல்களை நடத்திய போதிலும் ஹூதிகளின் தாக்கும் திறன் குறையவில்லை.

இந்த நிலையில், உலகின் மிகமுக்கியமான கப்பல் போக்குவரத்து பகுதியான சூயேஸ் கால்வாயை கடந்து செல்லும் கப்பல்கள் அனைத்தும் செங்கடல் ஊடாகவே பயணிக்க வேண்டும். ஹூதி கிளர்ச்சியாளர்களின் தாக்குதல் அச்சத்தால் உலகின் பிரபல சரக்குக் கப்பல் கம்பனிகள் தமது கப்பல் போக்குவரத்துகளை இடைநிறுத்தியுள்ளன என்பது குறிப்பிடத்தக்கது. (ஐ)

# 13 குறித்த கொள்கையை ஜனாதிபதி மாற்றிவிட்டார்!

## ஐக்கிய மக்கள் சக்தி குற்றச்சாட்டு



கொழும்பு, மார்ச் 04

**"எம்முடன் இருக்கும்போது மாகாண சபைகளுக்கு காணி, பொலிஸ் அதிகாரங்களை வழங்கும் முகமாக தேசிய காணி, பொலிஸ் ஆணைக் குழுக்களை பரிந்துரைத்த ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தற்போது 13ஆவது திருத்தச் சட்டம் தொடர்பான கொள்கையை மாற்றியுள்ளார்", என்று ஐக்கிய மக்கள் சக்தியின் எம். பியும் பிரதம கொரடாவுமான லக்ஷ்மன் கிரியெல்ல தெரிவித்துள்ளார்.**

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க பொலிஸ் அதிகாரமற்ற 13ஆவது திருத் தச்சட்டத்தை நடைமுறைப்படுத்தத் தயார் என்று குறிப்பிட்டு வடக்கு, கிழக்கு தமிழ், முஸ்லிம் கட்சிகளுடன் சந்திப்ப தற்கு தீர்மானித்துள்ளமை தொடர்பில் கருத்து வெளியிடும்போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

மேலும், "நாம் ஐக்கிய தேசியக் கட்சி யின் ரணில் விக்கிரமசிங்கவின் தலைமை யில் செயல்பட்ட காலத்தில் அவர் 13ஆவது திருத்தச்சட்டத்தை முழுமையாக நடைமுறைப்படுத்த வேண்டும் என்பதில் உறுதியான நிலைப்பாட்டில் இருந்தார். விசேடமாக, நல்லாட்சிக் காலத்தில் அவர் பிரதமராக இருந்த போது புதிய அரசமைப்பை நிறுவுவதற்கான செயல்பாடுகள் நடைபெற்றன. இதன்போது 75 வழிநடத்தல் குழு கூட் டங்கள் நடைபெற்றிருந்தன.

அந்தக் குழு கூட்டங்கள் அனைத்தி லும் நான் பங்குபற்றியிருந்தேன். அந்த குழுக் கூட்டங்களின்போது தற்போதைய ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவே மாகாண சபைகளுக்கான காணி, பொலிஸ் அதிகாரங்களை வழங்க வேண்டும் என்ற விடயத்தில் உறுதியான நிலைப்பாட்டில் இருந்தார்.

அதற்காக அவர் தேசிய காணி ஆணைக் குழு, தேசிய பொலிஸ் ஆணைக்குழு ஆகியவற்றை நிறுவ வேண்டும் என்ற பரிந்துரைகளையும் அவரே மேற்கொண்டிருந்தார். ஆனால், அவர் தற்போது 13ஆவது திருத்தச்சட்டம் சம்பந்தமாக தனது கொள்கையை மாற்றிவிட்டார் என்பது மிகத் தெளிவாக தெரிகின்றது. விசேடமாக, அவர் மாகாண சபைக ளுக்கு பொலிஸ் அதிகாரங்களை வழங் கக் கூடாது என்பதில் உறுதியாக இருக்கிறார்.

ஆகவே, அவருடைய கொள்கை மாற்றத்தின் பின்னால் என்ன காரணம் இருக்கின்றது என்பது அனைவருக்கும் தெரிந்த ஒரு விடயமாகும். அது மட்டுமன்றி, அவர் தற்போது தமிழ், முஸ்லிம் கட்சி களை அரவணைத்து கொண்டு தனது அரசியல் பயணத்தை முன்னெடுக்கவே விரும்புகிறார்.

மேலும், மாகாண சபைக ளுக்கான தேர்தல் நடத்தப்படாது ஐந்து ஆண்டு களுக்கும் அதிகமான காலம் கடந்துவிட்ட நிலையில் முதலில் மக்கள் பிரதி நிதிகளின் பங்கேற்புடன் மாகாண சபை களுக்கான செயல்பாடுகளுக்கு சந்தர்ப்பத்தை ஏற்படுத்த வேண்டியதே அவரு டைய பொறுப்பு - என்றார்.

(ஐ)

# முரண்பாட்டால் கணவனை குத்திக் கொன்றார் மனைவி!

கொழும்பு, மார்ச் 04

கணவன் மனைவிக்கு இடையே ஏற்பட்ட முரண்பாட்டை அடுத்து கணவனை மனைவியே குத்தக் கொன்றார் என்று பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

இந்தச் சம்பவம் நேற்று அதிகாலை காலி - கரந்தெனிய பகுதியில் இடம்பெற்றுள்ளது. இதில், ஒரு பிள்ளையின் தந்தையான 42 வயது நபரே உயிரிழந்தார்.

கணவன் - மனைவியிடையே அடிக்கடி முரண்பாடு நிலவியதாகவும் இது தொடர்பில் கரந்தெனிய பொலிஸ் நிலையத்தில் பல தடவைகள் முறைப்பாடு செய்யப்பட்டு இருவரும் பொலிஸாரால் சமரசம் செய்து வைக்கப்பட்டிருந்தனர் என்று தெரிய வருகின்றது.

கரந்தெனிய பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

# ஜனாதிபதித் தேர்தலில் அன்னம் சின்னத்தில் ரணில்?

கொழும்பு, மார்ச் 04

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க எதிர்வரும் ஜனாதிபதித் தேர்தலில் அன்னம் சின்னத்தில் பொதுக் கூட்டணியில் போட்டியிடவுள்ளார் என்று அரசியல் வட்டாரங்கள் தெரிவிக்கின்றன.

ஜனாதிபதித் தேர்தலில் தனது நட்பு கட்சிகளுடன் கூட்டு சேர்ந்து தேசிய வேட்பாளராக போட்டியிடுவதே ஜனாதிபதியின் விருப்பம்.

ரணில் விக்கிரமசிங்கவின் கட்சி தற்போது நிமல் லான்சா குழு மற்றும் பொதுஜன பெரமுன கட்சியை சேர்ந்த சிரேஷ்டர்கள் குழுவின் தலைமையிலான பல சிறு கட்சிகளின் ஆதரவைப் பெற திட்டமிட்டுள்ளது.

அமைச்சர் பிரசன்ன ரணதுங்க, இராஜாங்க அமைச்சர் பிரமித பண்டார தென்னகோன் போன்றவர்கள் ஏற்கனவே ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்கவுடன் நெருங்கிய தொடர்பிலுள்ள பொதுஜன பெரமுன கட்சியின் தலைவர்கள் என்பது குறிப்பிடத்தக்கது.

இதேவேளை, புதிய ஜனநாயக முன்னணி கட்சியின் சின்னமான அன்னம் சின்னத்திலேயே 2010 தேர்தலில் சரத் பொன்சேகா, 2015இல் மைத்திரிபால சிறிசேன, 2019இல் சஜித் பிரேமதாஸ ஆகியோர் போட்டியிட்டனர் என்பது குறிப்பிடத்தக்கது.

(ஐ)

# ஜனாதிபதி வேட்பாளராக ஹறிணியை நியமியுங்கள்

## ஹிருணிகா கூறுகிறார்



கொழும்பு, மார்ச் 04

தேசிய மக்கள் சக்தியின் ஜனாதிபதி வேட்பாளராக கலாநிதி ஹறிணி அமரசூரிய நியமிக்கப்பட வேண்டும் என்று ஐக்கிய மக்கள் சக்தியின் ஹிருணிகா பிரேமச்சந்திர தெரிவித்துள்ளார்.

கொழும்பில் உள்ள எதிர்க் கட்சித் தலைவரின் பணிமனையில் நடைபெற்ற செய்தியாளர் சந்திப்பிலேயே இதனைத் தெரிவித்தார்.

ஹறிணி அமரசூரியவுக்கு நல்ல அரசியல் வாழ்க்கை இருக்கிறது. அவரை கட்சியின் ஜனாதிபதி வேட்பாளராக முன்னிறுத்த வேண்டும் என்றும் ஹிருணிகா கூறினார்.

(ஐ)

# புனர்வாழ்வு குறித்த புதிய திட்டம் வரும் 15 முதல் நடைமுறையாகும்

## பொலிஸ் மா அதிபர்



கொழும்பு, மார்ச் 04

போதைக்கு அடிமையானவர்களின் புனர்வாழ்வு தொடர்பான புதிய வேலைத் திட்டம் எதிர்வரும் 15ஆம் திகதி முதல் நடைமுறைப்படுத்தப்படும் என்று பொலிஸ் மா அதிபர் தேசபந்து தென்னக்கோன் தெரிவித்துள்ளார்.

அநுராதபுரத்தில் மத நிகழ்வு ஒன்றில் பங்கேற்றபின்னர் செய்தியாளர்களுக்கு கருத்து வெளியிடுகையிலேயே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

போதைப்பொருள் கடத்தலுக்கு எதிராக ஏற்படுத்தப்பட்ட அழுத்தங்களால் போதைப்பொருள் வலையமைப்புக்குள் முரண்பாடு அதிகரித்துள்ளது. இதனாலேயே, அவர்களுக்கு இடையே துப்பாக்கிச் சூட்டு சம்பவங்கள், கொலைகள் அதிகரித்துள்ளன என்றும் அவர் கூறினார்.

(ஐ)

# கைதி தப்பியோட்டம்!

கொழும்பு, மார்ச் 04

மனைவியை கொலை செய்த குற்றச்சாட்டில் கைதானவர் ஒருவர் அநுராதபுரம் போதனா மருத்துவமனையில் சிகிச்சை பெற்று வந்த நிலையில் தப்பிச் சென்றுள்ளார் என்று பொலிஸார் தெரிவித்தனர்.

அநுராதபுரம் - எப்பாவலை கிராமத்தைச் சேர்ந்த 56 வயதுடைய நபரே இவ்வாறு தப்பிச் சென்றுள்ளார்.

கைதானவர், சில வருடங்களுக்கு முன்னர் மனைவியை கொன்றார் என்ற குற்றச்சாட்டில் கைது செய்யப்பட்டார். இவர் தொடர்பான வழக்கு அநுராதபுரம் மேல் நீதிமன்றில் நிலுவையில் உள்ளது என்பது குறிப்பிடத்தக்கது.

(ஐ)

# கைதிகளின் மூலமாக ரூ. 25.3 கோடி இலாபம்!

கொழும்பு, மார்ச் 04

2023ஆம் ஆண்டில் கைதிகள் மூலம் மேற்கொள்ளப்பட்ட விவசாயம் மற்றும் பல்வேறு தொழில் நடவடிக்கைகளில் ஈடுபட்டதால் சிறைச்சாலைகள் திணைக்களம் 25.3 கோடி ரூபாய் வருமானத்தை ஈட்டியுள்ளது.

கைதிகளை விவசாய நடவடிக்கைகளில் ஈடுபட செய்ததன் மூலம் 2023ஆம் ஆண்டு 9 கோடி ரூபாய் வருமானம் ஈட்டப்பட்டது என்று சிறைச்சாலைகள் திணைக்கள ஆணையாளர் நாயகம் துஷார உபுல்தெனிய தெரிவித்துள்ளார்.

சிறைக் கைதிகள் பயிர்களை வளர்ப்பதற்கும் பராமரிப்பதற்கும் ஊக்குவிப்பதுடன், சிறைக் கைதிகள் சிறைச்சாலைக்குள் சாதாரண வாழ்க்கை முறைக்கு பழகுவதற்கு உதவுவதாகவும் சிறைக் கைதிகள் தண்டனைக் காலத்தின் பின் சமூகத்துடன் இணைக்கப்படும்போது அவர்களுக்கு நன்மை பயக்கும்.

அமெரிக்கா, தென் கொரியா மற்றும் ஐரோப்பாவில் மேற்கொள்ளப்பட்ட ஆய்வில் 7 கைதிகளில் ஒருவர் மனநோயால் பாதிக்கப்பட்டுள்ளார் அல்லது மருத்துவ மன அழுத்தத்தால் பாதிக்கப்பட்டுள்ளார் என்பது தெரியவந்துள்ளது. எனவே, கைதிகளை விவசாய நடவடிக்கையில் ஈடுபடுத்துவதும் அவர்களது மனோநிலை மேம்பாட்டுக்கு உதவுகிறது.

"கைதிகள் கைவிடப்பட்டதாக உணர்கிறார்கள், அவர்கள் தனியுரிமை உணர்வை இழக்கிறார்கள் மற்றும் அர்த்தமுள்ள செயல்பாடுகள் இல்லை, அத்துடன் அவர்கள் சிறையில் இருக்கும் போது சமூக தொடர்புகளை இழக்கிறார்கள். எனவே அவர்கள் விடுவிக்கப்படும் போது சமூகத்துடன் மீண்டும் அனுசரித்து செல்வது கடினமாக உள்ளது. இதுபோன்ற பிரச்னைகளைத் தடுக்க அவர்களை தொழில் நடவடிக்கைகளில் ஈடுபடுத்துகிறோம் " என்றும் அவர் கூறினார்.

(ஐ)

# கதிரியக்க வல்லுநர்கள் பற்றாக்குறை மருத்துவமனைகளில் சேவை பாதிப்பு!

கொழும்பு, மார்ச் 04

கதிரியக்க தொழில்நுட்ப வல்லுநர்கள் பற்றாக்குறை காரணமாக பல மருத்துவமனைகளில் சேவை தடைபட்டுள்ளதாக அரசாங்க கதிரியக்க தொழில்நுட்ப வல்லுநர்கள் சங்கம் தெரிவித்துள்ளது.

இதன் காரணமாக கொழும்பு தேசிய மருத்துவமனை, கண்டி தேசிய மருத்துவமனை, கராப்பிட்டி போதனா மருத்துவமனை, குருநாகல் பொது மருத்துவமனை, பதுளை பொது மருத்துவமனை, லேடி ரிட்ஜ்வே சிறுவர் மருத்துவமனை உள்ளிட்ட பல மருத்துவமனைகள் கடும் நெருக்கடியை எதிர்நோக்கியுள்ளன என்று அந்த சங்கத்தின் தலைவர் சானக தர்மவிக்ரம தெரிவித்துள்ளார். வல்லுநர்கள் நாட்டை விட்டு வெளியேறியமையே இதற்குக் காரணம் என்றும் அவர் கூறினார்.

(ஐ)

## செங்கடலின்

கொள்ளைகள் அதிகமாக இடம் பெறும் பகுதி. சரக்கு மற்றும் மீன்பிடி கப்பல்களின் நடமாட்ட சுதந்திரத்தை உறுதி செய்வதற்காக இந்தக் கப்பல்கள் அனுப்பப்படுகின்றன. இரண்டாவது கப்பலை அனுப்புவதற்கு இலங்கை தயாராகி வருகின்றது. மேலதிக விவரங்களை வெளியிட முடியாது - என்றார். (ஐ)

## தமிழர்களுக்கு...

இலங்கையில் இன மற்றும் மத சுதந்திரம் தொடர்பான காங்கிரஸ் குழுக் கூட்டத்துக்கு இணைத் தலைமை தாங்குவதற்கு அமெரிக்க காங்கிரஸ் உறுப்பினர் விலி நிக்கேலின் பெயர் முன்மொழியப்பட்டுள்ளது.

அமெரிக்க காங்கிரஸ் உறுப்பினர்களின் பங்கேற்புடன் நடைபெறக்கூடிய இலங்கையில் இன மற்றும் மத சுதந்திரம் தொடர்பான காங்கிரஸ் குழுக் கூட்டத்தில் இலங்கையில் வாழும் அனைத்து இனங்களினதும், குறிப்பாக ஈழத்தமிழ் சமூகத்தின் சிவில் மற்றும் மனித உரிமைகள் நிலைவரம் தொடர்பில் விரிவாக ஆராயப்படும்.

இதன்படி, இதற்கு இணைத் தலைமையேற்றுள்ள விலி நிக்கேல், இலங்கையில் இன மற்றும் மத சுதந்திரம் தொடர்பான காங்கிரஸ் குழுக் கூட்டத்துக்கு இணைத் தலைமை தாங்குவது குறித்து மிகுந்த பெருமிதமடைவதாகவும் அவர் தெரிவித்துள்ளார். (ஐ)

## இந்திய...

இலங்கை - இந்திய கடல் எல்லையில் நின்றவாறு கறுப்புக் கொடிகளை காட்டியும் படகுகளில் கறுப்பு கொடிகளை கட்டியும் தமது எதிர்ப்பை பதிவு செய்தனர்.

இதேசமயம், இந்திய மீனவர்களே எமது வாழ்வாதாரத்தை அழிக்காதே, இந்திய - இலங்கை அரசுகளை மீனவர்களை மோதவிட்டு வேடிக்கை பார்க்காதே என்ற கோஷங்களை இதன்போது மீனவர்கள் எழுப்பியிருந்தனர். (ஐ-02)

## இலங்கையின்...

ஒடுக்குமுறை சட்டங்கள் மற்றும் எதேச்சாதிகார போக்கிலான நடவடிக்கைகளால் இலங்கையால் சமாதானம், நல்லிணக்கத்தை அடைய முடியாது என்று சுட்டிக்காட்டியிருந்தார்.

இதைத் தொடர்ந்து அவருக்கு பதிலளிக்கும் வகையில் இலங்கையின் மனித உரிமைகள் வதிவிட பிரதிநிதி ஹிமாலி அருணாதிலக,

அண்மைய காலங்களில் முகங்கொடுத்திருக்கும் சவால்களிலிருந்து நாட்டை மீட்டெடுக்கும் நோக்கில், நாட்டின் ஜனநாயக விழுமியங்கள் மற்றும் ஜனநாயகக் கட்டமைப்பக்களின் நிலையான தன்மையைப் பேணும் அதே வேளை, பொருளாதார மீட்சி மற்றும் நல்லிணக்கம் சார்ந்த இலக்குகளில் அரசாங்கம் விசேட கவனம் செலுத்தியுள்ளது.

சமூக, அரசியல் மற்றும் பொருளாதாரத்துறை சார்ந்த விடயங்களில் வழமையான நிலையை அடைந்துகொள்வதில் குறிப்பிடத்தக்களவிலான முன்னேற்றம் எட்டப்பட்டுள்ளது என்பதை மறுக்கமுடியாது என்றும் கூறியிருந்தார்.

திக்கப்பட்ட மக்களுக்குரிய நிவாரணங்களை வழங்குவதை விடுத்து, அரசியல்மயப்படுத்தப்பட்ட மனித உரிமைகளுக்கு துணைபோகும் சில தரப்பினரின் “இரட்டை நிலைப்பாடுகளை“ எம்மால் ஏற்றுக்கொள்ள முடியாது. காஸாவில் உள்ள மக்கள் தீவிர அச்சுறுத்தலுக்கு முகங்கொடுத்துள்ளனர். அவ்வாறிருக்கையில் அது பற்றிய தீர்மானங்களும் பொறுப்புக்கூறல் பொறிமுறைகளும் எங்கே? என்று கேள்வி எழுப்பியிருந்தார்.

இந்த நிலையிலேயே இலங்கை விவகாரம் குறித்து இன்றைய தினம் ஆராயப்படவுள்ளது. (ஐ)

## கொழும்பு...

இந்திய மத்திய அரசாங்கத்தின் கலாசார அமைச்சின் ஏற்பாட்டில் இராமாயணம் சித்திர காவியம் எனும் நிகழ்வில் அமைச்சர் ஜீவன் பங்கேற்று உரையாற்றுகையிலேயே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

மேலும், “இலங்கை, இந்திய உறவு பல நூற்றாண்டுகளாக பலமாகவே உள்ளது. நெருக்கடி ஏற்பட்டபோது கூட இந்தியாதான் முதலாவதாக நேசக்கரம் நீட்டியது. இதனை நாம் மறக்கமட்டோம்.

இராமாயணத்துடன் தொடர்புபட்ட முக்கியமான புனித தலங்கள் நான் பிரதிநிதித்துவப்படுத்தும், மத்திய மாகாணத்தில் நுவரெலியா மாவட்டத்தில் உள்ளன. இதன்மூலம் சுற்றுலாத்துறையை மேம்படுத்துவது தொடர்பில் திட்டம் வகுத்து வருகின்றோம்.

இராமாயணம் சித்திர காவியம் நிகழ்வு இந்தியாவுக்கு மட்டும் அல்ல இலங்கைக்கும் மிக முக்கியம். மேலும் இரு நாடுகளுக்கும் இடையிலான உறவை வலுப்படுத்துவதற்கு நான் முன்னின்று செயல்படுவேன்.” - என்றார்.

அதேவேளை, அருங்காட்சியகம் அரங்கை அமைச்சர் திறந்து வைத்ததுடன், புகைப்பட கண்காட்சியையும் ஆரம்பித்து வைத்தார். (ஐ)

# பொருள் விலை உயர்வால் மக்கள் சீரழிவு ஜனாதிபதியோ வெளிநாட்டு பயணத்தில்!

## எதிர்க்கட்சி தலைவர் சஜித் சாடல்

கொழும்பு, மார்ச் 04

பால் தேனீர், தேநீர், தின்பண்டங்கள், சிற்றூண்டிகள், சாப்பாடுப் பொதிகள், கொத்து போன்றவற்றின் விலைகள் அதிகரித்துள்ளன. 24 மணி நேரமும் 365 நாட்களும் நாட்டில் விலை அதிகரிப்பு கலாசாரமே இருந்து வருகிறது. விலைவாசி உயர்ந்து, மக்களின் வாழ்க்கை சீரழிந்தாலும் அரசிடம் இதற்கான பதில் இல்லை. இவ்வாறான நிலையில் ஜனாதிபதி பாராளுமன்றத்தில் பணத்தை பெற்றுக்கொண்டு வெளிநாடு முழுவதும் பயணங்களை மேற்கொண்டு வருகிறார் என்று எதிர்க்கட்சித் தலைவர் தெரிவித்தார்.

ரணசிங்க பிரேமதாசவின் 200 ஆடைத் தொழிற்சாலைகள் வேலைத் திட்டத்தின் பின்னர், நாட்டுக்கு டொலர்களைப் பெற்றுக்கொள்ளும் உள்நாட்டு சர்வதேச அளவிலும் இன்னும் எந்தத் திட்டமும் அறிமுகப்படுத்தப்படவில்லை. இவ்வாறு போகும் போக்கில் சர்வதேச நாணய நிதியத்துடன் 100



உடன்படிக்கைகள் கைச்சாத்திடப்பட்டாலும் டொலர்களைப் பெற்றுக் கொள்ள முடியாது போகும்.

எமது நாட்டால் மின் உற்பத்திப் பொருட்களை ஏற்றுமதி செய்ய முடியவில்லை. அரசாங்கம் எவ்வளவு தம்பட்டம் அடித்துக் கொண்டாலும், அரசாங்கம் எப்போதும் மக்கள் மீது சுமைகளை ஏற்றி ஆட்சியாளர்கள் மனிதாபிமானமற்ற வாழ்க்கையை முன்னெடுத்து வருகின்றனர்.ஐக்கிய மக்கள் சக்தி அரசாங்கத்தில் அதிநவீன மூலோபாய திட்டத்தின் மூலம் டொலர்களை கொண்டு வரும் திட்டத்தை செயல்படுத்தப்படும்.

பிரபஞ்சம் தகவல் தொழிநுட்ப வேலைத் திட்டத்தின் 117 ஆவது கட்டமாக 10 இலட்சம் ரூபாய் பெறுமதியான ஸ்மார்ட் வகுப்பறை உபகரணங்களை அம்பாந்தோட்டை பாடசாலை ஒன்றுக்கு நேற்று வழங்கிய போதே எதிர்க்கட்சி தலைவர் மேற்கண்டவாறு கூறினார். (ஐ)

## சாந்தனின்...

மருத்துவமனையில் உயிரிழந்தார். அவரின் வித்துடல் விமானம் மூலம் கடந்த வெள்ளிக்கிழமை விமானம் மூலம் கொண்டு வரப்பட்டது. சாந்தனின் உடலத்துக்கு மீண்டும் பிரேத பரிசோதனை நடத்தப்பட்ட பின்னர் உறவினர்களிடம் கையளிக்கப்பட்டது.

நீர்கொழும்பில் இருந்து வவுனியாவுக்கு கொண்டுவரப்பட்ட வித்துடல் ஊர்தி பயணமாக யாழ்ப்பாணம் நோக்கி எடுத்து வரப்பட்டது. வவுனியாவிலுள்ள போராளிகள் நலன்புரி சங்கத்துக்கு முன்பாகவும் வவுனியா பழைய பேருந்து நிலையத்திலும் வித்துடல் அஞ்சலிக்கு நிறுத்தப்பட்டது. இரு இடங்களிலும் பெருமளவான மக்கள் கூடி கண்ணீர் சிந்தி அஞ்சலி செலுத்தினர்.

**பொலிஸார் தடங்கல்**

வவுனியா பழைய பேருந்தில் ஊர்தியை நிறுத்தி வைக்க முடியாது என்று அங்கு நின்ற பொலிஸார் ஊர்தியாக வந்தவர்களிடத்தில் தெரிவித்தனர். இதைத் தொடர்ந்து ஊர்தி வாகனத்தின் சாரதியை கைது செய்ய முனைந்தனர். பின்னர், அங்கு நின்ற சிலர் பொலிஸாருடன் சமரசத்தை ஏற்படுத்தி அஞ்சலியை தொடர்ந்தனர்.

இதைத் தொடர்ந்து பயணித்த ஊர்தி மாங்குளத்தை அடைந்தது. அங்கும் மக்கள் பெருமளவில் திரண்டு அஞ்சலி செலுத்தினர். தொடர்ந்து கிளிநொச்சியை வந்தடைந்த சாந்தனின் வித்துடல், அங்கு பிரத்தியேகமாக அமைக்கப்பட்ட மண்டபத்தில் வைக்கப்பட்டு அஞ்சலி செலுத்தப்பட்டத. தமிழீழ விடுதலைப் புலிகளின் மூத்த போராளியான பசீர் காக்கா ஈகைச்சுடர் ஏற்றி அஞ்சலி செலுத்தினார். பாராளுமன்ற உறுப்பினர் சி. சிறீதரன் தமிழ்த் தேசியக் கொடி போர்த்தி அஞ்சலி செலுத்தினார். தொடர்ந்து மக்கள் பூக்கள் தூவி அஞ்சலி செலுத்தினர்.

தொடர்ந்து, இயக்கச்சி, இத்தாவில் பகுதிகளில் சாந்தனின் வித்துடல் மக்கள் அஞ்சலிக்காக வைக்கப்பட்டது. இதன் பின்னர், கொடிகாமம் - நெல்லியடி வீதி வழியாக பயணித்த ஊர்திக்கு நெல்லியடியை அடைந்த போது ராஜீவ் காந்தி கொலை வழக்கில் கைதாகி தற்போதும் திருச்சி சிறையில் அடைக்கப்பட்டுள்ள முருகனின் தாயாரும் சகோதரியும் அஞ்சலி செலுத்தினர். அத்துடன், சாந்தனுக்காக தமிழ்நாட்டில் வழக்காடிய சட்டத்தரணி புகழேந்தியும் அஞ்சலி செலுத்தினார்.

இதைத் தொடர்ந்து வல்வெட்டித்துறை தீருவிலுக்கு ஊர்தி பயணமானது. அங்கு பெருந்திரளான மக்கள் திரண்டு அஞ்சலி செலுத்தினர். அரசியல் பிரமுகர்கள், மதத் தலைவர்கள், சமூக பிரமுகர்கள் பலரும் அங்கு அஞ்சலி செலுத்தியுடன் இரங்கல் உரையும் ஆற்றினர். மாலை 6 மணியளவில் தீருவிலில் இருந்து சாந்தனின் சொந்த இல்லம் அமைந்துள்ள உடுப்பிட்டி இலக்கணாவத்தைக்கு பயணமானது.

35 ஆண்டுகாலம் தனது மகனை பிரிந்து - காணாது அவரின் வருகைக்காக பல இடங்களுக்கும் அலைந்து திரிந்து போராடிய தாய் மகனின் வித்துடலை கண்டு கதறி அழுதார். சாந்தனின் தங்கை ஆரத்தி எடுத்து வித்துடலை வரவேற்றார். அப்போது, “என் தெய்வம் வீட்டுக்கு வருகின்றது, யாரும் அழக் கூடாது”, என்று அவர் உருக்கமாகக் கூறியது அனைவரின் கண்களிலும் கண்ணீரை வரவைத்தது.

சாந்தனின் வித்துடல் ஊர்தி வவுனியாவிலிருந்து புறப்பட்டு தீருவிலை அடையும்வரை குடிமனைகள் உள்ள பகுதிகள் அனைத்திலும் வீதிகளில் திரண்ட மக்கள் பூக்கள் தூவி அஞ்சலி செலுத்தினர். தாய்மார் கண்ணீர் சிந்தி அழுது தமது துயரத்தை வெளிப்படுத்தினர்.

யாழ்ப்பாணம் - வடமராட்சி - உடுப்பிட்டியை சேர்ந்தவரான சாந்தன் இந்தியாவின் முன்னாள் பிரதமர் ராஜீவ் காந்தி கொலை வழக்கில் கைதாகி 1991 ஆம் ஆண்டு கைது செய்யப்பட்டார். இந்த வழக்கில் 4 இலங்கையர் உட்பட 7 பேர் 32 வருடங்களுக்கும் மேலாக சிறைத் தண்டனை அனுபவித்து வந்த நிலையில் சாந்தன் உட்பட 6 பேரும் (பேரறிவாளன் முன்னரே விடுதலையானார்) 2022 நவம்பர் 11ஆம் திகதி விடுதலை செய்யப்பட்டனர். இலங்கையர்கள் நால்வரும் திருச்சி சிறப்பு முகாமில் அடைக்கப்பட்ட நிலையில், கல்லீரல் செயலிழப்பால் சாந்தன் பாதிக்கப்பட்டு சென்னை ராஜீவ் காந்தி மருத்துவமனையில் சிகிசசை பெற்று வந்தார். இந்நிலையில் அவர் இலங்கை திரும்பவிருந்த கடந்த பெப்ரவரி 28ஆம் திகதி காலை மாரடைப்பால் உயிரிழந்தார் என்பது குறிப்பிடத்தக்கது. (ஐ)

## சிவாஜிலிங்கம்...

சென்னையில் தங்கியிருந்து சிகிச்சை பெற்று வந்த அவர் திலீபன் நினைவேந்தல் வழக்குக்காக கொழும்புக்கு வந்திருந்தார். பயங்கரவாத சட்டத்தின் கீழ் தொடுக்கப்பட்ட அந்த வழக்கில் கடந்த 28ஆம் திகதி அவரை கொழும்பு மேல் நீதிமன்றம் விடுதலை செய்தது.

இதைத் தொடர்ந்து மீண்டும் சென்னை சென்ற அவர் உடல்நிலை பாதிக்கப்பட்டு நேற்று முன்தினம் மருத்துவமனையில் சேர்க்கப்பட்டார் என்பது குறிப்பிடத்தக்கது. (ஐ)

# மின்சாரம், எரிவாயுவின் விலைகள் ஏப்ரலில் குறையும்

கொழும்பு, மார்ச் 04

எரிபொருள், மின்சாரம், எரிவாயு உள்ளிட்ட பல அத்தியாவசியப் பொருட்களின் விலைகள் எதிர்வரும் ஏப்ரல் மாதத்தில் குறைவடைய உள்ளதாகத் தெரி விக்கப்படுகிறது.

அத்துடன, எண்ணெய் மற்றும் மின்சார சலுகை களை இந்த மாதம் வழங்குவதற்கு அரசாங்கம் முன்னர் திட்டமிட்டிருந்த போதிலும், ஏப்ரல் மாதத்தில் அவற்றை ஒரே நேரத்தில் வழங்குவதற்கு சம்பந்தப் பட்ட நிறுவனங்கள் தீர்மானித்துள்ளன என்று கூறப்பட்டது.

## மீனவர்...

இதற்கு வடக்கு மீன வர்கள் கடும் எதிர்ப்பை வெளியிட்டு வருகின்ற னர். இந் திய மீனவர்களின் அத்துமீறலுக்கு எதிராக தொடர்ந்து போராட்டங்கள் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன. இதனிடையு, இலங்கை கடல் எல்லைக்குள் அத்துமீறி மீன்பிடித்த 170 பேர் நீதிமன்ற உத்தரவில் சிறை வைக்கப்பட்டுள்ளனர். இதற்கு எதிர்ப்பு தெரிவித்து இந்திய மீன வர்கள் தமிழ்நாட்டில் தொடர் போராட்டங்களை நடத்தி வருகின்றனர்.

எனவே, தீவிரமடைந்து வரும் இலங்கை - இந்திய மீனவர்களின் பிரச்னைக்கு பேச்சு மூலம் தீர்வு காணப்பட வேண்டியதன் அவசி யத்தை ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க ஆலோசனை வழங்கியதன் அடிப்படையில் இந்த சந்திப்பு இடம்பெற்றுள்ளது.

இதன்போதே, இரு நாடுகளின் மீனவர் பிரச்னைக்கு நீண்டகாலம் நிலைத்திருக்கக்கூடிய தீர்வு திட்டம் குறித்து அவதானம் செலுத்தப்பட்டது. அத்துடன், தீர்வுக்கான பேச்சுகளை உடன் ஆரம்பிக்கவும் இணக்கம் எட்டப்பட்டது. (ஐ)

ஈழநாடு
Eelanadu

# தரம் 8 முதல் பாடசாலைகளில் ஏ. ஐ. தொழில்நுட்பப் பாடம்!

## கல்வி அமைச்சர் அறிவிப்பு



கொழும்பு, மார்ச் 04

**தரம் 8 மற்றும் அதற்கு மேற்பட்ட மாணவர்களுக்கு தகவல் தொழில்நுட்ப பாடத்துடன் செயற்கை நுண்ணறிவு (ஏ. ஐ. ) கற்பதற்கான வாய்ப்பு கிடைக்கும். இதற்கான எதிர்வரும் 19ஆம் திகதி முதல் 20 பாடசாலைகளில் தொடங்கப்படும் என்று கல்வி அமைச்சர் சுசில் பிரேமஜயந்த தெரிவித்துள்ளார்.**

இந்தப் பணிக்காக ஆசிரியர்களுக்கு பயிற்சி அளிக்கப்பட்டு வருவதாகவும் வரும் ஆண்டில் இது நாடு முழுவதும் நடைமுறைப்படுத்தப்படும் என்றும் அவர் சுட்டிக்காட்டினார்.

எதிர்காலத்தில், நாட்டில் உள்ள ஒவ்வொரு குழந்தைக்கும் அவர்களின் திறன்கள் மற்றும் விருப்பங்களுக்கு ஏற்ப அவர்களின் எதிர்கால இலக்குகளை அடைவதற்குத் தேவையான பின்னணி வழங்கப்படும் - என்றார். (ஐ)

# இந்தியாவின் ஆக்கிரமிப்புக்கு இனியும் இடமளிக்க முடியாது!

## விமல் வீரவன்ஸ குற்றச்சாட்டு

கொழும்பு, மார்ச் 04

பொருளாதார மீட்சி என்று குறிப்பிட்டுக் கொண்டு இந்தியாவின் 29ஆவது மாநிலமாக இலங்கையை மாற்றியமைக்கும் செயல்பாடுகளை அரசாங்கம் முன்னெடுக்கிறது. இந்தியாவின் ஆக்கிரமிப்புக்கு இடமளித்துக் கொண்டு இருக்க முடியாது என்று தேசிய சுதந்திர முன்னணியின் தலைவர் விமல் வீரவன்ச தெரிவித்தார்.

கொழும்பில் நடந்த நிகழ்வு ஒன்றில் பேசிய அவர்,

நாட்டுக்கு என்ன நேர்ந்துள்ளது. மக்கள் சொல்லொணா துயரங்களை எதிர்கொண்டுள்ளார்கள். வாழும் சூழல் மிக மோசமாக பாதிக்கப்பட்டுள்ளது. பொருளாதார மற்றும் சமூக பாதிப்பை அரசாங்கம் தமக்கு சாதகமாக பயன்படுத்திக் கொள்கிறது. இந்தியாவின் செல்வந்தரான அதானிக்கு இலங்கையின் பெரும்பாலான வளங்களை வழங்க அரசாங்கம் விசேட கவனம் செலுத்தியுள்ளது.

மன்னார் காற்றாலை மின் உற்பத்தியின் பங்குகளை அதானி நிறுவனத்துக்கு வழங்குவதால் நடுத்தர மக்களுக்கு எவ்வித பயனும் கிடைக்காது. நட்டமடையும் அரச நிறுவனங்களை மறுசீரமைப்பதாக குறிப்பிட்டுக் கொண்டு இலாபமடையும் ரெலிக்கொம் நிறுவனத்தை இந்திய நிறுவனத்துக்கு வழங்க அரசாங்கம் தீர்மானித்துள்ளது. அதேபோல் இலங்கை மின்சாரத்தை பல கூறுகளாக பிரித்து அதனையும் இந்தியாவுக்கு வழங்க நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டுள்ளன.

இலங்கையின் பொருளாதார கேந்திர மையங்களை இந்திய நிறுவனங்களுக்கு வழங்கும் செயற்பாடுகளினால் தேசிய பாதுகாப்பு அச்சுறுத்தலுக்குள்ளாக்கப்படும். இவ்வாறான நிலையில் இந்தியாவுடன் எட்கா ஒப்பந்தத்தை கைச்சாத்திடுவதற்கான முயற்சிகளும் முன்னெடுக்கப்படுகின்றன.

எட்கா ஒப்பந்தம் கைச்சாத்திடப்பட்டால் இந்தியர்கள் இலங்கையில் சுதந்திரமாக தமது வர்த்தக நடவடிக்கைகளில் ஈடுபடுவார்கள். பொருளாதார ரீதியில் பாதிக்கப்பட்டுள்ள இலங்கையர்கள் சொந்த நாட்டுக்குள் இரண்டாம் தர பிரஜைகளாக கருதப்படுவார்கள். இலங்கை இந்தியாவின் 29 ஆவது மாநிலமாக மாற்றமடையும்.



ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க மற்றும் அவருக்கு ஆதரவாக செயல்படும் ராஜபக்ஷர்களிடமிருந்து நாட்டை பாதுகாக்க அனைவரும் ஒன்றிணைந்து செயல்பட வேண்டும் என்பதற்காக மக்களை தெளிவுபடுத்தும் நடவடிக்கைகளில் ஈடுபட்டுள்ளோம். இந்தியாவின் ஆக்கிரமிப்புக்கு இடமளித்துக் கொண்டு இருக்க முடியாது - என்றார். (ஐ)

# தாவடி விபத்தில் பெண் படுகாயம்!

யாழ்ப்பாணம், மார்ச் 04

தாவடி சந்தியில் இடம்பெற்ற விபத்தில் ஒருவர் படுகாயமடைந்த நிலையில் யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனையில் சேர்க்கப்பட்டுள்ளார்.

இந்த சம்பவம் நேற்று மாலை 06.15 மணியளவில் இடம்பெற்றுள்ளது. அத்துடன் மோட்டார் சைக்கிளும் முச்சக்கர வண்டியும் நேருக்கு நேர் மோதுண்டு விபத்துக்கு உள்ளானதில் பெண் ஒருவர் படுகாயமடைந்தார்.

பொலிஸார் மேலதிக விசாரணைகளை நடத்தி வருகின்றனர்.

# சொக்லேட்டுக்குள் மறைத்து 'ஐஸ்' கடத்தியவர் கைதானார்

கொழும்பு, மார்ச் 05

சொக்லேட்டுக்குள் மறைத்து வைத்து ஐஸ் போதைப் பொருளை நீண்டகாலமாக கடத்திவந்த ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளார்.

கட்டுநாயக்காக சர்வதேச விமான நிலையம் ஊடா கவே அவர் இந்தக் கடத்தலில் ஈடுபட்டுள்ளார்.

பொலிஸ் விசேட அதிரடிப் படையினர் மேற்கொண்ட சுற்றிவளைப்பின்போது கிடைத்த தகவலின் அடிப்படையில் மேற்கொள்ளப்பட்ட விசாரணைகளின் போதே இந்தக் கடத்தல் தொடர்பான தகவல்கள் வெளியாகி யுள்ளன.

கிரிபத்கொட பகுதியில் சொகுசு காரொன்றை சோதனையிட்டபோது, சொக்லேட் பொதி செய்யப்பட்ட சுமார் 5 கிலோ போதைப் பொருள் ஐஸ் கண்டுபிடிக்கப்பட்டது.

இந்த கடத்தல் தொடர்பில் கைது செய்யப்பட்ட சந்தேகநபரிடம் மேற்கொள்ளப்பட்ட மேலதிக விசாரணைகளின்போது, கடத்தல்காரர் ஒருவருக்கு சொந்த மான வத்தளை மற்றும் கணேமுல்ல வீடுகள் தொடர்பிலான தகவல்களும் விசேட அதிரடிப்படையினருக்கு கிடைத்துள்ளன.

தற்போது டுபாயில் பதுங்கியிருக்கும் போதைப் பொருள் வியாபாரிகளான நிபுண மற்றும் நந்தசேன ஆகியோரின் அறிவுறுத்தலிலேயே இவ்வாறு போதைப் பொருள்ள கடத்தப்பட்டுள்ளமை தெரியவந்துள்ளது. (ஐ)

# நாயுடன் மோட்டார் சைக்கிள் மோதிய விபத்தில் பெண் பலி!

வாழைச்சேனை, மார்ச் 04

மோட்டார் சைக்கிளின் குறுக்கே நாய் பாய்ந்ததால் ஏற்பட்ட விபத்தில் பெண் ஒருவர் உயிரிழந்தார்.

நேற்று ஞாயிற்றுக்கிழமை காலை வாழைச்சேனை - நாவலடியில் - குடாப்பொக்கணையில் மட்டு. - கொழும்பு பிரதான வீதியில் இந்தச் சம்பவம் இடம்பெற்றுள்ளது.

கணவனும் மனைவியும் மோட்டார் சைக்கிளில் ஏறாவூருக்கு சென்றுவிட்டு திரும்பிக் கொண்டிருந்த போதே இந்த விபத்து இடம்பெற்றுள்ளது.

இதில், குடாப்பொக்க ணையை சேர்ந்த அப்துல் ஹமித் ஜெமிலா (வயது 53) என்பவரே உயிரிழந்தார். அவரின் கணவர் காயமடைந்து வாழைச்சேனை ஆதார மருத்துவமனையில் சேர்க்கப்பட்டுள்ளார்.

விபத்துக் குறித்து மேலதிக விசாரணைகளை வாழைச்சேனை பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர். (ஐ)

# போதைப்பொருள் கடத்திய கோடீஸ்வர வர்த்தகர்கள் கைது!

கொழும்பு, மார்ச் 04

கசினோ சூதாட்டத்தால் வங்குரோத்து நிலைக்கு சென்று பாதாள உலகத்துடன் இணைந்து போதைப் பொருள் கடத்தலில் ஈடுபட்டனர் என்று கூறப்படும் கோடீஸ்வர வர்த்தகர்கள் இருவர் நேற்று ஞாயிற்றுக் கிழமை மத்திய ஊழல் தடுப்புப் பிரிவினரால் கைது செய்யப்பட்டுள்ளனர்.

போதைப்பொருள் கடத்தல்காரரான தற்போது துபாய்க்கு தப்பிச் சென்றுள்ள படோவிற்ற அசங்க என்பவரின் போதைப்பொருள் கடத்தல் வர்த்தகத்தில் இவர்கள் இணைந்துள்ளமையும் தெரிய வந்துள்ளது.

கல்கிஸ்ஸ பிரதேசத்தில் வசிக்கும் முன்னாள் கோடீஸ்வர கொங்கிரீட் வர்த்தகர் ஒருவரும் ஜப்பானிலிருந்து வந்து பொரலஸ்கமுவ பிரதேசத்தில் வாடகை வீட்டில் தங்கியிருந்த கோடீஸ்வர வர்த்தக பெண் ஒருவருமே கைது செய்யப்பட்டுள்ளனர். (ஐ)

# சிறுபோகத்துக்காக மகாவலி நீர் திறப்பு!

கொழும்பு, மார்ச் 04

சிறுபோகத்துக்காக மகாவலி வலயத்துக்கு நீரை விடுவிக்கும் நடவடிக்கை எதிர்வரும் 20 ஆம் திகதி ஆரம்பிக்கப்படவுள்ளதாக மகாவலி அதிகார சபை தெரிவித்துள்ளது.

மார்ச் முதல் ஜூலை வரை தண்ணீர் விநியோகிக்கப்படும் என மகாவலி அதிகார சபை குறிப்பிட்டுள்ளது.

இதனிடையே, சிறுபோகத்துக்கு போதுமான அளவு நீர் காணப்படுவதாக நீர்ப்பாசனத் திணைக்களம் தெரிவித்துள்ளது.

நீர்ப்பாசனத் திணைக்களத்தின் கீழ் 258 வாவிகள் காணப்படுகின்றன. அந்த வாவிகளில் 90 வீதத்திற்கும் அதிகமான கொள்ளளவு காணப்படுவதாக நீர்ப்பாசனத் திணைக்களம் தெரிவித்துள்ளது.

# ஜனவரியில் சுற்றுலா மூலமாக 34.2 கோடி டொலர் வருமானம்!

## நிதி இராஜாங்க அமைச்சர்



கொழும்பு, மார்ச் 04

இந்த ஆண்டு ஜனவரியில், சுற்றுலாத் துறை மூலம் 34. 2 கோடி டொலர்கள் வருமானம் கிட்டியுள்ளதாக நிதி இராஜாங்க அமைச்சர் ரஞ்சித் சியம்பலாபிட்டிய தெரிவித்துள்ளார்.

இந்த ஆண்டு ஜனவரியில், சுற்றுலாத் துறை மூலம் 34. 2 கோடி டொலர்கள் வருமானம் கிட்டியுள்ளது. இது கடந்த ஆண்டின் வருவாயை விட 122 சதவிகிதம் அதிகம் என்றும் தெரிவித்துள்ளார்.

கடந்த ஆண்டு தொடர்ந்து எதிர்மறை வளர்ச்சியை சந்தித்து வந்த இலங்கையின் பொருளாதாரம், கடந்த ஆண்டில் மீண்டும் நேர்மறை வளர்ச்சி கண்டுள்ளதாகவும் அவர் கூறினார். (ஐ)

இப்பத்திரிகை 707, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம் என்ற முகவரியில் அமைந்துள்ள ஈழநாடு பிறைவேற் லிமிட்டெட் நிறுவனத்தினரால் 04.03.2024 அன்று ஏ9 வீதி, நாவற்குழியில் உள்ள ஈழநாடு பிறைவேற் லிமிட்டெட் அச்சகத்தில் அச்சிட்டு வெளியிடப்பட்டது.

ஈழநாடு





# நதன் லயன் புதிய சாதனை

வெலிங்டன், மார்ச் 04

அவுஸ்திரேலிய அணியின் நதன் லயன் நியூசிலாந்துக்கு எதிரான டெஸ்டில் 10 விக்கெட்களை வீழ்த்தி புதிய சாதனைகளை படைத்துள்ளார்.

நியூசிலாந்தில் சுற்றுப்பயணம் செய்துவரும் அவுஸ்திரேலிய அணி இரண்டு போட்டிகள் கொண்ட டெஸ்ட் தொடரில் விளையாடி வருகிறது.

இந்நிலையில், அவுஸ்திரேலிய அணியின் சுழல் பந்து வீச்சாளர் நதன் லயன் பல சாதனைகளை படைத்துள்ளார். அவர் முதல் இன்னிங்ஸில் 4 விக்கெட்டும் 2ஆவது இன்னிங்சில் 6 விக்கெட்டும் கைப்பற்றி ஆக மொத்தம் 10 விக்கெட்களை எடுத்துள்ளார்.

நியூசிலாந்தில் 10 விக்கெட்களை வீழ்த்திய 10ஆவது வீரர் என்ற பெருமையை அவர் பெற்றுள்ளார்.

நியூசிலாந்துக்கு எதிராக 10 விக்கெட்களை வீழ்த்திய முதல் அவுஸ்திரேலிய சுழற்பந்து வீச்சாளர் லயன் ஆவார். இதைத் தவிர நியூசிலாந்து மண்ணில் 2006 இற்கு பிறகு 10 விக்கெட்களை கைப்பற்றிய முதல் பந்து வீச்சாளர் இவராவார்.

மேலும் ஒரு சாதனையாக அதிக டெஸ்ட் விக்கெட்டுகள் எடுத்த வீரர் பட்டியலில் மேற்கிந்தியத் தீவுகள் வீரரை பின்னுக்கு தள்ளி 7ஆவது இடத்தை நதன் லயன் பிடித்துள்ளார். லயன் 521 விக்கெட்களுடன் கொட்னி வோல்ஷ் 519 விக்கெட்களுடன் 8ஆவது இடத்திலும் உள்ளனர்.

முதல் இடத்தில் இலங்கை ஜாம்பவான் முத்தையா முரளிதரன் 800 விக்கெட்களுடன் யாரும் தொட முடியாத இடத்தில் இருக்கிறார். (ஐ)

# டெஸ்ட் சம்பியன்ஷிப் இந்தியா முதலிடத்தில்!



டுபாய், மார்ச் 04

டெஸ்ட் சம்பியன்ஷிப் புள்ளிகள் பட்டியலில் மீண்டும் இந்திய அணி முதல் இடத்தைப் பிடித்துள்ளது.

அவுஸ்திரேலியாவுக்கு எதிரான முதல் டெஸ்ட் போட்டியில் நியூசிலாந்து அணி தோற்றது. அவுஸ்திரேலியாவின் வெற்றியால் இந்தியாவுக்கு முதலிடம் கிடைத்தது. இந்திய அணி 64.58 சதவீத புள்ளிகளுடன் இருக்கிறது.

அவுஸ்திரேலியாவிடம் தோற்றதால் நியூசிலாந்து அணி 60.00 சதவீத புள்ளிகளுடன் முதல் இடத்தில் இருந்து 2ஆவது இடத்துக்கு பின் தங்கியது. இங்கிலாந்துக்கு எதிரான கடைசி டெஸ்ட்டில் வெற்றி பெறுவதன் மூலம் இந்தியா முதல் இடத்தை தக்க வைத்து கொள்ளும்.

அவுஸ்திரேலிய அணி 59.09 சதவீத புள்ளிகளுடன் 3ஆவது இடத்தில் உள்ளது. பங்களாதேஷ் 4ஆவது இடத்திலும், பாகிஸ்தான் 5ஆவது இடத்திலும், மேற்கிந்தியத்தீவுகள் 6ஆவது இடத்திலும் தென்னாபிரிக்கா 7ஆவது இடத்திலும், இங்கிலாந்து 8ஆவது இடத்திலும், இலங்கை 9ஆவது இடத்திலும் உள்ளன.

அடுத்த ஆண்டு வரை உலக டெஸ்ட் சம்பியன்ஷிப் போட்டி நடைபெறும். முதல் 2 இடங்களை பிடிக்கும் அணிகள் இறுதிப் போட்டிக்கு தகுதி பெறும். (ஐ)

# நியூசிலாந்துக்கு எதிரான டெஸ்ட் 172 ஓட்டங்களால் ஆஸி. வெற்றி!

வெலிங்டன், மார்ச் 04

நியூசிலாந்துக்கு எதிரான முதல் டெஸ்ட் போட்டியில் 172 ஓட்டங்களால் அவுஸ்திரேலியா அபார வெற்றி பெற்றது.

அவுஸ்திரேலியா - நியூசிலாந்து அணிகள் இடையிலான முதலாவது டெஸ்ட் கிரிக்கெட் போட்டி வெலிங்டனில் நடைபெற்றது.

இதில் முதல் இன்னிங்ஸில் கமரூன் கிறீனின் (174 ஓட்டங்கள்) சதத்தின் உதவியுடன் அவுஸ்திரேலியா 383 ஓட்டங்கள் குவித்தது. நியூசிலாந்து அணி 179 ஓட்டங்களில் சுருண்டது.

204 ஓட்டங்கள் முன்னிலையுடன் 2ஆவது இன்னிங்ஸை தொடங்கிய அவுஸ்திரேலிய அணி 2ஆவது இன்னிங்ஸில் 51.1 ஓவர்களில் அவுஸ்திரேலிய அணி 164 ஓட்டங்களில் சுருண்டது. அந்த அணி கடைசி 6 விக்கெட்களை 37 ஓட்டங்களுக்குள் பறிகொடுத்தது. எனவே, நியூசிலாந்து அணிக்கு 369 ஓட்டங்கள் வெற்றி இலக்காக நிர்ணயிக்கப்பட்டது.

369 ஓட்டங்கள் எடுத்தால் வெற்றி என்ற கடினமான இலக்கை நோக்கி 2ஆவது இன்னிங்ஸை ஆடிய நியூசிலாந்து அணி மூன்றாம் நாள் ஆட்ட நேரம் முடிவில் நியூசிலாந்து அணி 41 ஓவர்களில் 3 விக்கெட்கள் இழப்புக்கு 111 ஓட்டங்கள் எடுத்தது.

நேற்று 4ஆவது நாள் ஆட்டம் தொடங்கியது. தொடங்கிய சிறிது நேரத்தில் ரச்சின் 59 ஓட்டங்களில் ஆட்டமிழந்தார். அடுத்து வந்த வீரர்கள் சொற்ப



ஓட்டங்களில் ஆட்டமிழந்தனர். கடைசி வரை போராடிய மிற்செல் 38 ஓட்டங்களில் கடைசி விக்கெட்டாக வீழ்ந்தார்.

இதனால் நியூசிலாந்து அணி 196 ஓட்டங்களில் சகல விக்கெட்களையும் இழந்தது. அவுஸ்திரேலிய தரப்பில் நதன் லயன் 6 விக்கெட்களை கைப்பற்றினார். இதன் மூலம் அவுஸ்திரேலியா அணி 172 ஓட்டங்கள் வித்தியாசத்தில் வெற்றி பெற்றது.

ஆட்டநாயகனாக கமரூன் கிறீன் தெரிவு செய்யப்பட்டார். 2 போட்டிகள் கொண்ட டெஸ்ட் தொடரில் அவுஸ்திரேலியா அணி 1-0 என்ற கணக்கில் முன்னிலையில் உள்ளது. (ஐ)

# ஆயிரமாவது போட்டியில் களமிறங்கிய இனியஸ்டா!

அஜ்மான், மார்ச் 01

நடப்பு யு. ஏ. இ. புரோ லீக் உதைபந்தாட்ட தொடரில் எமிரேட்ஸ் உதைபந்தாட்ட கழக அணிக்காக அஜ்மான் அணிக்கு எதிரான போட்டியில் களம் கண்டார் அன்ட்ரஸ் இனியஸ்டா. இது இவர் பங்கேற்று விளையாடிய ஆயிரமாவது கழக போட்டியாக அமைந்தது. இது அவரது மைல்கல் சாதனையாக அமைந்துள்ளது.

39 வயதான இனியஸ்டா, சிறந்த நடுக்கள வீரர். சர்வதேச உதைபந்தாட்ட அரங்கில் 2006 முதல் 2018 வரையில் ஸ்பெயின் அணிக்காக விளையாடினார். 2010இல் உலகக் கிண்ணம் வென்ற ஸ்பெயின் அணியில் அங்கம் வகித்தவர். முக்கியமாக நெதர்லாந்து அணிக்கு எதிரான இறுதிப் போட்டியில் கூடுதல் நேரத்தில் இவர் பதிவு செய்த கோல் மூலம் ஸ்பெயின், உலக சம்பியன் ஆனது. அந்தத் தருணம் என்றென்றும் உதைபந்தாட்ட ரசிகர்களால் மறக்க முடியாதது. 118ஆவது நிமிடத்தில் அணிக்கு தேவையான கோலை பதிவு செய்தார். 1-0 என்ற கணக்கில் இறுதிப் போட்டியில் ஸ்பெயின் வெற்றி பெற்றது. 2008 மற்றும் 2010இல் யூரோ சாம்பியன் பட்டம் வென்ற ஸ்பெயின் அணியிலும் இனியஸ்டா அங்கம் வகித்தார்.



தொழில்முறை ரீதியாக கழக அணிகளிலும் இனியஸ்டா முக்கிய பங்காற்றி வருகிறார். தற்போது எமிரேட்ஸ் கழக அணியில் விளையாடி வருகிறார். பார்சிலோனா பி, பார்சிலோனா, விஸெல் கோப், செலக்சன் எஸ்பனோலா அணிக்காக அவர் விளையாடி உள்ளார். பார்சிலோனா அணியின் அணித்தலைவராகவும் செயல்பட்டுள்ளார்.

தனது ஆயிரமாவது போட்டியில் அஜ்மான் அணிக்கு எதிராக சுமார் 80 நிமிடங்கள் களத்தில் விளையாடி இருந்தார். (ஐ)

# முதல் டெஸ்ட் வெற்றியை ருசித்தது அயர்லாந்து அணி!

அபுதாபி, மார்ச் 04

ஆப்கானிஸ்தான் அணிக்கு எதிரான ஒரே ஒரு போட்டி கொண்ட டெஸ்ட் தொடரை அயர்லாந்து அணி வென்றது.

ஆப்கானிஸ்தான் - அயர்லாந்து அணிகள் இடையிலான ஒரேயோர் ஆட்டம் கொண்ட டெஸ்ட் தொடர் அபுதாபியில் நடைபெற்று வந்தது. இதன் முதல் இன்னிங்ஸில் ஆப்கானிஸ்தான் 155 ஓட்டங்களும் அயர்லாந்து 263 ஓட்டங்களும் எடுத்தன. 108 ஓட்டங்கள் பின்தங்கிய நிலையில் 2-வது இன்னிங்ஸை விளையாடிய ஆப்கானிஸ்தான் நேற்றைய 3-வது நாள் ஆட்டத்தில் 75.4 ஓவர்களில் 218 ஓட்டங்களுக்கு ஆட்டமிழந்தது.

அதிகபட்சமாக அணித்தலைவர் ஹஸ்மதுல்லா ஷாகிதி 55, ரஹ்மனுல்லா குர்பாஸ் 46 ஓட்டங்கள் சேர்த்தனர். அயர்லாந்து அணி தரப்பில் கிரெய்க் யங், மார்க் அடேர், பார்ரி மெக்கார்தி ஆகியோர் தலா 3 விக்கெட்களை வீழ்த்தினர். இதையடுத்து 111 ஓட்டங்கள் இலக்குடன் துடுப்பெடுத்தாடிய அயர்லாந்து அணி 31.3 ஓவர்களில் 4 விக்கெட்களை மட்டும் இழந்து 111 ஓட்டங்கள் எடுத்து வெற்றி பெற்றது.

அணித்தலைவர் ஆண்டி பால்பிர்னி 58, லார்கன் டக்



கர் 27 ஓட்டங்கள் சேர்த்து ஆட்டமிழக்காமல் இருந்தனர். முன்னதாக பீற்றர் மூர் 0, கர்திஸ் கேம்பர் 0, ஹாரி டக்டர் 2, பால் ஸ்டிர்லிங் 14 ஓட்டங்களில் ஆட்டமிழந்தனர். 6 விக்கெட்கள் வித்தியாசத்தில் வெற்றி அயர்லாந்து அணி டெஸ்ட் தொடரை கைப்பற்றி கோப்பையை வென்றது.

டெஸ்ட் கிரிக்கெட் வரலாற்றில் அயர்லாந்து அணிக்கு இது முதல் வெற்றியாக அமைந்தது. அந்த அணி இதற்கு முன்னர் விளையாடிய 7 டெஸ்ட் போட்டிகளிலும் தோல்வியை சந்தித்திருந்தது. (ஐ)

# இந்தியா சர்வதேச அரிசி சந்தையை சீர்குலைப்பதாக தாய்லாந்து குற்றச்சாட்டு!




உலக வர்த்தக சபையின் கூட்டத்தில் அரிசி விவகாரத்தில் இந்தியா மீது குற்றஞ்சாட்ட தாய்லாந்து முயன்றது. இது இரு நாடுகளுக்கும் இடையே பதற்றத்தை ஏற்படுத்தியுள்ளது.

"இந்தியா பொது விநியோக முறைக்காகக் குறைந்த விலையில் அரிசியை வாங்கி, சர்வதேச அரிசி ஏற்றுமதி சந்தையை ஆக்கிரமிப்பதாக" உலக வர்த்தக அமைப்பிற்கான தாய்லாந்தின் தூதர் பிம்சானோக் வோன்கோர்போன் பிட்ஃபீல்ட், குற்றம் சாட்டினார்.

தாய்லாந்தின் இந்தக் கருத்துக்கு இந்தியா கடும் எதிர்ப்பு தெரிவித்துள்ளது. தென்கிழக்கு ஆசிய நாடான தாய்லாந்தின் பிரதிநிதிகள் கலந்துகொண்ட சில குழு உரையாடல்களில் பங்கேற்கவும் இந்திய பிரதிநிதிகள் மறுத்துவிட்டனர் என்று ஊடக அறிக்கைகள் தெரிவிக்கின்றன.

இருப்பினும், செவ்வாய்க்கிழமை நடைபெற்ற கூட்டத்தில் தாய்லாந்தின் கருத்தை சில செல்வந்த நாடுகளின் பிரதிநிதிகள் வரவேற்றனர் என்று டைம்ஸ் ஆஃப் இந்தியாவின் செய்தி குறிப்பிடுகிறது.




**அரிசி விவகாரத்தில் என்ன சர்ச்சை?**

உண்மையில் பொதுமக்களுக்கான உணவு கையிருப்பிற்கு வரம்பு உள்ளது. அமெரிக்கா, ஐரோப்பிய யூனியன், கனடா, ஆஸ்திரேலியா போன்ற நாடுகள் இதற்கான நிரந்தரத் தீர்வை பலமுறை நிறுத்திவிட்டன.

உணவுப் பாதுகாப்புத் தேவைகளைப் பூர்த்தி செய்வதற்காக நாட்டிலுள்ள மொத்த அரிசி உற்பத்தியில் 40 சதவிகிதத்தைக் குறைந்தபட்ச ஆதரவு விலையில் இந்தியா கொள்முதல் செய்கிறது. மீதமுள்ள விளைபொருட்கள் சந்தை விலையில் விற்கப்படுகின்றன.

"பொது விநியோக முறைக்கு கொள்முதல் செய்ய இந்தியா குறைந்தபட்ச ஆதரவு விலையில் வாங்குகிறது. பொது விநியொக முறைக்கு வாங்குவதற்கான 'பப்ளிக் ஸ்டாக் லிமிட்டில்" இந்தியா விலக்கு பெற்றுள்ளது. அதாவது இந்திய அரசு பொதுமக்களுக்கு விநியோகம் செய்வதற்காக கொள்முதல் செய்யும் அரிசியின் மீது சேமிப்பு வரம்பு பொருந்தாது," என்று மூத்த பத்திரிக்கையாளரும் வேளாண்மை நிபுணருமான ஹர்வீர் சிங் கூறினார். தாய்லாந்தின் இத்தகைய குற்றச்சாட்டுகளில் உண்மை இல்லை என்று அவர் கருதுகிறார்.

"பதிவுகளின்படி அப்படி இல்லை. பொது விநியோக முறைக்காக வாங்கும் அரிசியை இந்தியா ஏற்றுமதி செய்வதில்லை. மாறாக இந்திய ஏற்றுமதியாளர்கள் அரிசியை சந்தை விலையில் வாங்கி அதை ஏற்றுமதி செய்கிறார்கள் என்று இந்திய அரசு கூறுகிறது. இந்தியா மலிவு விலையில் அரிசியை வாங்கி ஏற்றுமதி செய்து அதன் மூலம் சந்தையை சீர்குலைப்பதாக தாய்லாந்து குற்றம் சாட்டுகிறது. ஆனால் இந்தக் குற்றச்சாட்டு உண்மை அல்ல," என்று அவர் கூறினார்.

**அரிசி ஏற்றுமதிக்கு இந்தியா கட்டுப்பாடுகளை விதித்திருந்தது**

உள்நாட்டு சந்தையின் தேவைகளைப் பூர்த்தி செய்வதற்காக இந்தியா படிப்படியாக அரிசி ஏற்றுமதியைக் கட்டுப்படுத்தியது. 2022இல் உள்நாட்டுச் சந்தையில் அரிசியின் விலை அதிகரித்தபோது இந்தியா கட்டுப்பாடுகளை விதிக்கத் தொடங்கியது.

முதலில் உடைந்த அரிசிக்குத் தடை விதித்தது. பின்னர் வெள்ளை அரிசி ஏற்றுமதியை நிறுத்தியது. சில அரிசி வகைகளுக்கு ஏற்றுமதி வரி விதிக்கப்பட்டது. இது தவிர உள்நாட்டு சந்தையில் விலையைக் கட்டுப்படுத்த பாஸ்மதி அல்லாத அரிசிக்கும் ஏற்றுமதி வரி விதிக்கப்பட்டது.

அரசு தனது கையிருப்பில் இருந்து குறைந்த விலைக்கு அரிசியை விற்றது. இந்தியா இந்தத் தடைகளை விதித்தபோது தாய்லாந்து அதை ஒரு வாய்ப்பாகக் கருதியது. இந்தச் சூழ்நிலையை தாய்லாந்து பயன்படுத்திக் கொள்ள முயலும் என்று தாய்லாந்து அரசின் அப்போதைய நிதி அமைச்சர் கூறியிருந்தார்.

ஆயினும் கடந்த சில ஆண்டுகளாக இந்தியாவின் அரிசி ஏற்றுமதி அதிகரித்துள்ளது. உலக அரிசி ஏற்றுமதியில் இந்தியாவின் பங்கு 40 சதவிகிதம். தாய்லாந்தும் ஒரு பெரிய அரிசி ஏற்றுமதியாளராக உள்ளது. இந்தியா தனது சந்தையைக் கைப்பற்றுவதாக தாய்லாந்து நினைக்கிறது.

உலக வர்த்தக அமைப்பின் கூட்டத்தில் தாய்லாந்து அரிசி ஏற்றுமதி விவகாரத்தை எழுப்பியதற்கான காரணத்தை விளக்கிய ஹர்வீர் சிங், "உலக வர்த்தக அமைப்பில் விவசாய அமைச்சர்கள் கூட்டம் நடைபெறுகிறது. இந்த மேடையில் இந்த விவகாரத்தை எழுப்பலாம் என்று தாய்லாந்து உணர்ந்திருக்க வேண்டும். தாய்லாந்து இந்த வாய்ப்பை பயன்படுத்திக்கொண்டது. அரிசி ஏற்றுமதியில் தாய்லாந்து இரண்டாவது இடத்தில் உள்ளது. இந்தியா தனது ஏற்றுமதிக்கு போட்டி கொடுப்பதாக தாய்லாந்து கருதுகிறது," என்று குறிப்பிட்டார்.

அரிசி ஏற்றுமதியில் இந்தியாவின் பங்கு சமீபத்திய ஆண்டுகளில் அதிகரித்துள்ளது. இருப்பினும் அரிசி ஏற்றுமதி மீது இந்தியா விதித்துள்ள "பகுதி தடை" மேற்கத்திய நாடுகளிடையே கோபத்தை அதிகரித்துள்ளது.




மானிய விலையில் கொள்முதல் செய்யப்படும் அரிசியை ஏற்றுமதி சந்தைக்கு அனுப்புவதன் மூலம் இந்தியா உலக வர்த்தகத்தில் செல்வாக்கு செலுத்த முயல்வதாக உலகின் வளர்ந்த நாடுகள் காட்ட முயன்றன.

ஆனால் சேமிப்பு வரம்பு விதிகள் பணக்கார நாடுகளுக்குப் பயனளிக்கும் வகையில் வடிவமைக்கப்பட்டுள்ளன என்று ஆய்வாளர்கள் நம்புகின்றனர். இந்த விதிகள் காரணமாக உற்பத்தியில் 10 சதவீதம் வரை மானியத்தில் வாங்கலாம் என்ற வரம்பை இந்தியா மீறுகிறது.

"இந்த விதிகள் கண்டிப்புடன் அமுலில் இல்லை. மேலும் இந்தியா அதிலிருந்து விலக்கு பெறுகிறது. புதிய விதிகள் உருவாக்கப்படும் வரை விதி மீறலை உறுப்பு நாடுகள் ஏற்றுக்கொண்டன. இது பத்து ஆண்டுகளுக்கு முன்னர் முடிவு செய்யப்பட்டது. அப்போதிருந்து எந்த சீர்திருத்தமும் செய்யப்படவில்லை. ஏழை நாடுகளுக்கான மிக முக்கியமான பிரச்னையை மேற்கத்திய நாடுகள் கவனிக்கவில்லை என்று இந்தியா கருதுகிறது," என்று ஹர்வீர் சிங் கூறினார்.

**அரிசி ஏற்றுமதியில் இந்தியா முதலிடம்**

கடந்த 2022ஆம் ஆண்டில் உலக அரிசி ஏற்றுமதியில் இந்தியாவின் பங்கு 40 சதவீதமாக இருந்தது. கடந்த ஆண்டு சில அரிசி வகைகளின் ஏற்றுமதிக்குத் தடை விதிக்கப்பட்ட போதிலும், அரிசி ஏற்றுமதியில் இந்தியா முதலிடத்தில் உள்ளது.

கட்டுப்பாடுகள் இருந்தபோதிலும், அரிசி ஏற்றுமதியில் இந்தியாவின் பங்கு 27 சதவீதமாக இருந்தது. இருப்பினும் 2024ஆம் ஆண்டில் இந்தியாவின் பாஸ்மதி அரிசி ஏற்றுமதி குறையக்கூடும்.

இந்தியாவின் போட்டி நாடான பாகிஸ்தான் தனது உற்பத்தியை அதிகரித்துள்ளதால் போட்டி விலையில் அரிசியை விற்பனை செய்து வருகிறது. இந்தியாவின் பாஸ்மதி ஏற்றுமதி இந்த ஆண்டு குறையலாம் என்று ராய்ட்டர்ஸ் தெரிவிக்கிறது.

நீளமான பாஸ்மதி அரிசி ஏற்றுமதியில் இந்தியாவும் பாகிஸ்தானும் முன்னணியில் உள்ளன. ஈரான், ஈராக், சவூதி அரேபியா, ஏமன், அமெரிக்கா போன்ற நாடுகளில் இந்த அரிசிக்கான கிராக்கி அதிகமாக உள்ளது.

இந்தியா 2023இல் பாஸ்மதி அரிசி ஏற்றுமதி மூலம் 5.4 பில்லியன் டாலர் சம்பாதித்துள்ளது. அதிக விலை காரணமாக, இந்தியா 2022ஐ விட 2023இல் 21 சதவீதம் அதிகமாக சம்பாதித்துள்ளது.




(16ம் பக்கம் பார்க்க)

# ஐ.நா மனித உரிமை ஆணையாளர் அறிக்கை:

## கடந்தகால மற்றும் நிகழ்கால மனித உரிமை மீறல்களையும் பொருளாதாரக் குற்றங்களையும் விசாரணை செய்து வழக்குத் தொடருவதற்கு நடவடிக்கை எடுக்க வலியுறுத்து!



**ஜெனீவா ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் பேரவையின் 55 வது கூட்டத்தொடரில் மனித உரிமைகளுக்கான ஐ.நா. உயர்ஸ்தானிகர் வொல்கர் ரேர்க் இலங்கையில் நல்லிணககம் மற்றும் பொறுப்புக்கூறல் முன்னேற்றங்கள் குறித்து மார்ச் 1 வெளியிட்ட வாய்மூல அறிக்கையின் முழு விபரம்**

படுமோசமான சமூக - பொருளாதார நெருக்கடிக்கு காரணமான தவறான பொருளாதார முகாமைத்துவத்துக்கும் ஊழலுக்கும் பொறுப்புக்கூறக் கோரியும் ஆழமான ஜனநாயக சீர்திருத்தங்களை வேண்டியும் இரு வருடங்களுக்கு முன்னர் ஆயிரக்கணக்கில் இலங்கையர்கள் வீதிகளில் இறங்கி கிளர்ச்சி செய்தார்கள். நாட்டின் சகல சமூகங்களுக்கும் பயன்தரக்கூடியதாக நீண்டகாலத்துக்கு முன்னரே இடம்பெற்றிருக்க வேண்டிய மாற்றத்தை முன்னெடுக்கக் கூடியதாக இருக்கும் என்ற பெரிய நம்பிக்கையும் எதிர்பார்ப்பும் அப்போது இருந்தது.

பொருளாதாரத்தை நிலையுறுதிப்படுத்துவதற்கு முக்கியமான நடவடிக்கைகளை அரசாங்கம் மேற்கொண்ட அதே வேளை, அடிப்படை உரிமைகள், சுதந்திரங்கள், சட்டத்தின் ஆட்சி மற்றும் ஜனநாயக ஆட்சிமுறை மீது பாரிய தாக்கத்தை ஏற்படுத்தக்கூடிய புதிய அல்லது உத்தேச சட்டங்கள் அறிமுகப்படுத்தப்படுவது குறித்து நான் கவலை கொண்டிருந்தேன்.

இணையவெளி பாதுகாப்பு சட்டம், பயங்கரவாத எதிர்ப்பு சட்டம், இலத்திரனியல் ஊடக ஒலிபரப்பு அதிகாரசபை சட்டமூலம், அரசாங்க சார்பற்ற தன்னார்வ நிறுவன மேற்பார்வை மற்றும் பதிவு சட்டமூலம் ஆகியவை அவற்றில் அடங்கும். இவை நிறைவேற்று அதிகார பீடத்தின் அதிகாரங்களை மேலும் வலுப்படுத்தி பாதுகாப்பு படைகளுடன் பரந்தளவு அதிகாரங்களை வழங்குவதுடன் ஒன்று கூடுவதற்கும் சங்கம் அமைப்பதற்கும் கருத்து வெளிப்பாட்டுக்கும் இருக்கும் சுதந்திரங்களை கடுமையாகக் கட்டுப்படுத்தக்கூடிய ஆபத்தைக் கொண்டிருக்கின்றன. அத்துடன் சிவில் சமூகப் பரப்பை மாத்திரமல்ல வர்த்தகத்துக்கான சூழ்நிலை மீதும் தாக்கத்தைச் செலுத்தும்.

அதேவேளை, இலங்கையின் பொருளாதார நெருக்கடியின் அனர்த்த விளைவுகள் மிகவும் வசதிகுறைந்த பின்தங்கிய மக்கள் பிரிவினரை தொடர்ந்தும் படுமோசமாக வதைக்கிறது.கடந்த வருடம் வறுமை 27.9 சதவீதத்துக்கு உயர்ந்திருப்பதாக மதிப்பிடப்பட்டிருக்கிறது. 2022 மார்ச்சில் இருந்து சுமார் மூன்றில் இரண்டு பங்கு குடும்பங்களின் மாதாந்த வருமானம் குறைவடைந்திருக்கின்ற அதேவேளை, உணவு, போக்குவரத்து, கல்வி செலவினங்கள் தொடர்ந்து அதிகரித்த வண்ணம் இருக்கின்றன. சமூகப் பாதுகாப்புக்கான நடவடிக்கைகளை அரசாங்கம் முன்னெடுக்கின்ற போதிலும், அதை வேண்டிநிற்கும் மக்கள் தொகை அதிகரித்த வண்ணமே இருக்கிறது. இவ்வருடம் அரசாங்கத்தின் மிகவும் பெரியளவு பட்ஜெட் செலவினம் கடனை திருப்பிச் செலுத்துவதற்கே செல்லும். பொருளாதார, சமூக மற்றும் கலாசார உரிமைகளைப் பேணிப் பாதுகாப்பதற்கு வசதியாக சர்வதேச நிதி நிறுவனங்களும் கடன் வழங்குநர்களும் இலங்கைக்கு நிதி வசதியையும் ஆதரவையும் வழங்கவேண்டும் என்று நான் வேண்டுகோள் விடுக்கிறேன்.

நீண்டகால உள்நாட்டுப்போர் முடிவுக்கு வந்து இவ்வருடம் 15 வருடங்கள் நிறைவடைகிறது. இருந்தாலும் மனித உரிமை மீறல்கள் தொடர்பிலான பிரச்னைகளுக்கு தீர்வு காணப்படவில்லை. காணாமல்போனவர்களின் ஆயிரக்கணக்கான குடுமப்பங்கள் தங்கள் உறவினர்களை இன்னமும் தேடிக்கொண்டிருக்கின்றன. அந்த முயற்சிகளின் போது அவர்கள் அச்சுறுத்தலையும் கைதுசெய்யப்படும் ஆபத்தையும் வன்குறையையும் எதிர்நோக்குகிறார்கள். வடக்கிலும் கிழக்கிலும் தொடரும் நிலத் தகராறுகள் மக்களின் வாழ்வாதாரத்தை கடுமையாகப் பாதிக்கின்றன. ஓரளவு அதிகாரப்பரவலாக்கத்தை உறுதிசெய்யும் மாகாணசபைகளும் உள்ளூராட்சி சபைகளும் தற்போது இயங்கவில்லை.

ஈஸ்டர் ஞாயிறு குண்டுத் தாக்குதல்களுக்கு பிறகு சுமார் ஐந்து வருடங்கள் கடந்துவிட்டன. உயர்நீதிமன்றம் உத்தரவுகளைப் பிறப்பித்த, போதிலும் மக்கள் உண்மையையும் நிதியையும் இன்னமும் தேடிக்கொண்டிருக்கிறார்கள்.

உண்மை, ஐக்கியம் மற்றும் நல்லிணக்கத்துக்கான ஆணைக்குழு ஒன்றுக்கான சட்டவரைவை அரசாங்கம் அறிமுகப்படுத்தியிருக்கின்ற போதிலும், உண்மையை நாடும் நம்பகத்தன்மையான செயன்முறை ஒன்றுக்கான உகந்த சூழல் இன்னமும் தோன்றவில்லை. சிவில் சமூகப் பிரதிநிதிகள், பத்திரிகையாளர்கள், உரிமை மீறல்களினால் பாதிக்கப்பட்டவர்கள் மற்றும் போரில் இறந்நவர்களை நினைவுகூரும் நிகள்வுகளை ஒழுங்கு



செய்வதில் ஈடுபடுபவர்கள் பாதுகாப்பு படைகளினால் கண்காணிப்புக்கு உள்ளாகுவதாகவும் துன்புறுத்தப்படுவதாகவும் கைது செய்யப்படுவதாகவும் குறைப்பாடுகள் எனது அலுவலகத்துக்கு தொடர்ந்து கிடைத்த வண்ணமே இருக்கிறது.

இலங்கை பாதுகாப்பு படைகளும் பொலிசாரும் பாலியல் வன்முறைகள் உட்பட ஆட்கடத்தல்கள், சட்டவிரோத தடுப்புக்காவல் மற்றும் சித்திரவதைகளில் ஈடுபடுவதாக நம்பகமான விபரங்கள் எனது அலுவலகத்துக்கு கிடைத்து வருவது குறித்து நான் ஆழ்ந்த கவலையடைகிறேன். இந்த சம்பவங்கள் பிரதானமாக நாட்டின் வடக்கு, கிழக்கு பகுதிகளிலேயே இடம்பெறுகின்றன. கடந்த வாரம் புதிய பொலிஸ்மாஅதிபர் நியமனம் உறுதிசெய்யப்பட்டிருக்கிறது. 2010 ஆண்டில் நபர் ஒருவர் சித்திரவதை செய்யப்பட்ட சம்பவத்துக்கு அவர் பொறுப்பாக இருந்ததாக உயர்நீதிமன்றம் தீர்ப்பளித்தபோதிலும் இந்த நியமனம் செய்யப்பட்டிருக்கிறது. இந்த சம்பவங்கள் விரிவான பாதுகாப்புத்துறைச் சீர்திருத்தங்கள் முன்னெடுக்கப்படவேண்டியதன் அவசியத்தை உணர்த்தி நிற்கின்றன.

பிற்போக்கான சட்டங்களையும் எதேச்சாதிகார அணுகுமுறைகள் மூலமாக இலங்கையில் நிலைபேறான சமாதானத்தையும் நல்லிணக்கத்தையும் சாதிக்கமுடியாது. அவை கடந்த காலத்து மனித உரிமைமீறல்கள் பற்றிய கவலைகளை நீடிக்கவே செய்யும்.

இந்த போக்கை உடனடியாக்கி மறுதலையாக்கி கடந்தகால மற்றும் நிகழ்கால மனித உரிமை மீறல்களையும் பொருளாதாரக் குற்றங்களையும் விசாரணை செய்து அவற்றில் சம்பந்தப்பட்டவர்களுக்கு எதிராக வழக்குத் தொடருவதற்கு நம்பகமான பொறுப்புகனகூறல் நடவடிக்கைகளை முன்னெடுக்குமாறு இலங்கை அரசாங்கத்தை நான் வலியுறுத்திக்கேட்டுக்கொள்கிறேன். சர்வதேச மற்றும் எல்லை கடந்த நியாயாதிக்கத்தை உகந்த முறையில் பயன்படுத்தவது உட்பட இந்த முயற்சிகளை தொடர்ந்து உறுதியாக முன்னெடுக்குமாறும் பாரதூரமான மனித உரிமை மீறல்கள் மற்றும் துஷ்பிரயோகங்களைச் செய்ததாக நம்பகமான முறையில் குற்றச்சாட்டப்படுபவர்களை இலக்குவைத்து நடவடிக்கைகளை மேற்கொள்ளுமாறு உறுப்புநாடுகளைக் கேட்டுக்கொள்கிறேன்.

நாட்டின் முரண்பாட்டினதும் பொருளாதார நெருக்கடியினதும் மூலவேர்க் காரணிகளை கையாளுவதன் மூலமாகவும் பொறுப்புக்கூறலை உறுதிசெய்வதன் மூலமாகவும் மாத்திரமே மெய்யான நல்லிணக்கத்தையும் நிலைபேறான சமாதானம் மற்றும் அபிவிருத்தியையும் அடைவதற்கான வாய்ப்புக்களை இலங்கையினால் மேம்படுத்தக்கூடியதாக இருக்கும்.

# இந்தியா சர்வதேச அரிசி சந்தையை...

(14ம் பக்கத் தொடர்ச்சி)

**தாய்லாந்தின் குற்றச்சாட்டுகள் இந்தியாவின் வர்த்தக உறவுகளை பாதிக்குமா?**

உலக வர்த்தக அமைப்பின் 13வது அமைச்சர்கள் நிலையிலான கூட்டத்தில், உணவு சேமிப்பு வரம்புக்கு நிரந்தர தீர்வு காண்பது குறித்து விவாதம் நடத்த வேண்டும் என்று இந்தியா கோரிய அதே நாளில் தாய்லாந்து தூதர் இந்தக் கருத்துகளைத் தெரிவித்தார்.

உலக வர்த்தக அமைப்பின் விதிகளின் கீழ் “பொது உணவு கையிருப்பு” என்பது “அரசுக்குச் சொந்தமான நிறுவனங்கள் அல்லது பிற பொது முகமைகள் மூலம் அரசுகள் உணவு தானியங்களை வாங்குதல், சேமித்தல் மற்றும் விநியோகித்தல்” என்பதாகும்.

தாய்லாந்தின் குற்றச்சாட்டுகள், ‘பப்ளிக் ஸ்டாக் ஹோல்டிங்” மற்றும் விவசாய மானியங்கள் தொடர்பான சிக்கல்களை மீண்டும் வெளிக்கொண்டு வந்துள்ளன என்று ஹர்வீர் சிங் குறிப்பிட்டார்.

கோவிட் தொற்றுநோய்க்குப் பிறகு உணவுப் பாதுகாப்பு என்பது ஒரு முக்கியமான உலகளாவிய விஷயமாக மாறியுள்ளது. தேசிய பாதுகாப்புடன் உணவுப் பாதுகாப்பும் இணைக்கப்பட்டுள்ளதாக ஆய்வாளர்கள் கருதுகின்றனர்.

அத்தகைய சூழ்நிலையில் இந்தியா தொடர்பான தாய்லாந்தின் கருத்துகள் பரந்த வர்த்தக நலன்கள் மீதும் தாக்கத்தை ஏற்படுத்தக்கூடும்.

“மன்றத்தில் வாய்ப்பு கிடைத்தவுடன் தாய்லாந்து இந்தப் பிரச்னையை எழுப்பியுள்ளது. இதன் காரணமாக விவசாயம் மற்றும் வர்த்தகம் தொடர்பான விஷயங்கள் பற்றிய விவாதம் தொடங்கும்,” என்று ஹர்வீர் சிங் தெரிவித்தார்.

இந்த விவகாரத்தில் இந்தியாவின் நிலைப்பாடு தெளிவாக உள்ளது என்று



இந்திய வர்த்தக மற்றும் தொழில்துறை அமைச்சர் பியூஷ் கோயல், அபுதாபியில் நடைபெற்ற இந்தக் கூட்டத்தில் தெரிவித்துள்ளார்.

“இந்தப் பிரச்னைக்கான தீர்வை யார் தடுக்கிறார்கள், ஏன் உலக வர்த்தக அமைப்பின் பணிகள் சரியாக நடைபெறவில்லை என்பதை உலகம் பார்க்க வேண்டும். இந்தியா இந்த விஷயத்தில் ஒருமித்த கருத்தை அடைய விரும்புகிறது. ஆனால் சில நாடுகள் இந்த ஒருமித்த கருத்தை உடைக்கின்றன,” என்றார் அவர்.

உலக வர்த்தக அமைப்பில் எந்த முடிவு எடுக்கப்பட்டாலும், இந்திய விவசாயிகளின் நலன்கள் மனதில் கொள்ளப்பட வேண்டும் என்று இந்தியா விரும்புகிறது என்று பியூஷ் கோயல் கூறினார்.

உலக வர்த்தக அமைப்பின் அமெரிக்க பிரதிநிதி கேத்தரின் தாய் செய்தியாளர்களிடம் பேசுகையில், “சர்ச்சையைத் தீர்க்கும் சீர்திருத்தம் ஒரு சிக்கலான விஷயம்” என்றார்.

இந்தத் திசையில் ஒரு நேர்மறையான, ஆக்கப்பூர்வமான மற்றும் நடைமுறைக்கு உகந்த சூழல் உருவாக்கப்பட்டு வருவதாக அவர் கூறினார். இன்னும் நிறைய செய்ய வேண்டியுள்ளது என்பதையும் அவர் ஒப்புக்கொண்டார்.

அமெரிக்காவும் ஐரோப்பிய ஒன்றிய நாடுகளும் விவசாயத்தில் விரிவான சீர்திருத்தங்களுடன் இதை இணைக்கின்றன. விவசாய மானியங்களைக் குறைப்பதும் இறக்குமதி வரிகளைக் குறைப்பதும் இதில் அடங்கும். சமீபத்திய மாதங்களில் பல ஐரோப்பிய நாடுகளில் விவசாயிகள் ஆர்ப்பாட்டங்களை நடத்தியுள்ளனர்.

உள்நாட்டு அரசியல் சூழ்நிலைகள் காரணமாக மேற்கத்திய நாடுகள் குறிப்பாக ஐரோப்பிய ஒன்றியம், தற்போது மானியங்களைக் குறைப்பது அல்லது இறக்குமதி வரிகளைக் குறைப்பது பற்றி விவாதிக்கத் தயாராக இல்லை. இதனால் தான் பொது சேமிப்பு வரம்பு விஷயமும் விவாதிக்கப்படாமல் உள்ளது.

கடந்த 2022இல் நடைபெற்ற உலக வர்த்தக சபைக் கூட்டத்தில், 2024ஆம் ஆண்டுக்குள் பயனுள்ள தீர்வு எட்டப்படும் என்று உறுப்பு நாடுகள் உறுதியளித்தன. இப்போது இந்த அமைச்சர்கள் கூட்டத்திலும் முடிவுகளை எட்டுவதற்குப் பதிலாக உறுதிமொழிகள் மட்டுமே வெளியாகும் என்று தெரிகிறது.

**இந்தியா மற்றும் தாய்லாந்து இடையே வணிக உறவுகள்**

இந்தியா மற்றும் தாய்லாந்து ஆகிய இரண்டுமே தெற்காசிய நாடுகள். இரு நாடுகளுக்கும் அந்தமான் கடலில் நீர் எல்லைகள் உள்ளன. இரு நாடுகளுக்கும் இடையே வரலாற்று ரீதியான மற்றும் கலாசார உறவுகளும் உள்ளன. இரு நாடுகளுக்கும் இடையே நல்ல வர்த்தக உறவும் உள்ளது.

கடந்த 2021ஆம் ஆண்டில் இந்தியா மற்றும் தாய்லாந்து இடையே 14.41 பில்லியன் டாலர்கள் அளவுக்கு வர்த்தகம் இருந்தது என்று “அப்சர்வர் ஆஃப் எக்கனாமிக் காம்ப்ளெக்ஸிடி” அமைப்பின் தரவுகள் தெரிவிக்கின்றன.

இந்தியா தாய்லாந்திற்கு 5.91 பில்லியன் டாலர்கள் மதிப்பிலான பொருட்களை ஏற்றுமதி செய்துள்ளது. தாய்லாந்து இந்தியாவிற்கு 8.5 பில்லியன் டாலர்கள் மதிப்பிற்கு ஏற்றுமதி செய்துள்ளது.

இந்தியாவின் மிக முக்கியமான தயாரிப்பு வைரங்கள் ஆகும். அதே நேரத்தில் தாய்லாந்து இந்தியாவிற்கு அதிகபட்ச பாமாயிலை ஏற்றுமதி செய்கிறது.

கடந்த 2023 நவம்பரில் இந்தியா தாய்லாந்திற்கு 33.5 கோடி டாலர்களுக்கு ஏற்றுமதி செய்தது. தாய்லாந்து இந்தியாவுக்கு 80.6 கோடி டாலர்களுக்கு ஏற்றுமதி செய்தது. 2022 நவம்பருடன் ஒப்பிடும்போது, இந்தியாவின் ஏற்றுமதி 10.7 சதவிகிதம் குறைந்துள்ளது. தாய்லாந்தின் ஏற்றுமதி 13.3 சதவீதம் குறைந்துள்ளது.





